# களத்தில்

களம்-10 1986 ஊக்குவிப்பு - 2


## முழுமையான விடுதலைக்காக முடிவான பாதையில்

# மக்களோடு புலிகள்!!

**தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாக இராணுவ ரீதியாக தயார் பட்ட சூழ்நிலையடைந்து விட்டது ஆனுல் ஆயுத ரீதியான வெற்றி மட்டும் தமிழீழ உருவாக்கத்திற்கு வழிவகுக் காதுஎன்பதோடு போராட்டத்தை மழுங்கடிக்க காத்திருக்கும் சக்திகளை வெற்றி கொள்ளவும் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது பல்வேறு நெருக்கடிமிக்க இன்றைய நிலையில் தமிழீழ மக்களின் ஒன்று திரண்ட சக்தியினூடே மாத்திரம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றி கொள்ள முடியும்**

இனிமேல் போராட்டத்தின் வளர்ச்சி, வெற்றி தமிழீழ மக்களில் தான் தங்கியுள்ளது. போராட்டம் சந்தித்த வேதனைகளும், சோதனைகளும் வெற்றிகளும் சாதனைகளும் அளப்பரியது. இதன் வெற்றிகளுக்காகவும் சாதனைகளுக்காகவும் வேதனையுற்ற உயிர்கள் 340ஐ தாண்டிவிட்டது. பல்லாயிரக் கணக்கான மக்களும் பல்கோடிக்கணக்கான சொத்துக்களும் இப்போராட்டத்திற்கு உரமிடப்பட்டுவிட்டன. இந்நிலையில் தியாகமிகு இப்போராட்டத்தை காக்க மக்கள் அணிவரும் ஓர் அணியில் திரள வேண்டும்.

ஓர் குழந்தை முதல் வயது முதிர்ந்த பாட்டன் பாட்டி வரை "இறுதி மூச்சு வரை தமிழீழம் தான்" எனப் பிரகடனப்படுத்த வேண்டும்.

இன்று தமிழீழத்தின் ஒவ்வொர் அங்குல மண்ணிலும் விடுதலைப்புலிகள் நிலைபெற்று விட்டார்கள். புலிகளின் கட்டுப்பாட்டினுள் வென்றெடுக்கப்பட்டு வரும் பிராந்தியங்கள் நாளுக்கு நாள் விரிவடைந்தே வருகிறது. புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள இராணுவ முகாம்கள் சிங்கள சிப்பாய்களின் சிறைச்சாலைகளாகி விட்டன. இன்று புலிகளின் பிராந்திய கட்டுப்பாட்டுக்கான யுத்தமோ அல்லது நேரடியுத்தமோ அல்லது கெரில்லா தாக்குதலோ நடைபெருத நாளே கிடையாது எனலாம். அதே நேரம் இவ் வெற்றிக்காக ஓர் விடுதலைப் புலியாவது களப்பலியாகாத நாளும் கிடையாது.

இதே போககில் எமது முடிவும் எமக்குத் தெரியும் ஆனுல் எம்மக்களின் விடிவு முக்கியம். இன்று அதை நோக்கி நாம் வீறு நடை போடுகிறோம். எம்மக்களின் விடிவுமிக்க சுபீட்சமான எதிர்காலத்தை நாம் மனரீதியில் உணர்கிறோம்.

### தற்காப்பு யுத்தத்தில்

ஒவ்வொர் விடுதலைப் போராட்டத்திலும் மக்களின் ஆயுதமெந்திய பங்களிப்பு இன்றியமையாததாக அமைகிறது. மக்கள் தம்மை தாமே பாதுகாத்து தம் பிரதேசத்தை காக்கும் பணியிலும் ஓர் விடுதலைப் போராட்டத்தில் பங்களிக்கின்றனர். வியட்னுமில் விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் வேலைசெய்யும் போது கூட முதுகில் துப்பாக்கியை கொழுவி தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதோடு நாட்டையும் காப்பாற்றிக் கொண்டே தான் தம் நாளாந்த அலுவல்களை தொடர்ந்தனர்.

இதே நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டு விட்டது. பல்வேறு பட்ட பிராந்தியங்கள் பிராந்திய கட்டுப்பாட்டுக்குரிய சூழ்நிலையோடு இராணுவம் தரையால் நகர முடியாத நிலையை தொட்டு விட்டது. இப் பிராந்தியங்களில் இடம் பெறும் ஆகாய ரீதியான குண்டு வீச்சை எதிர்கொள்வது இன்றுள்ள முக்கிய பணியாகும்.

எனவே எம்மக்கள் ஒவ்வொருவரும் குண்டு வீச்சிலிருந்து தம்மை தாமே பாதுகாத்து கொள்ளும் தற்காப்பு யுத்தத்தை நோக்கி நகர்வதும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை தொடர்ந்து பாதுகாபபதுமான செயற்பாடுகளில் இறங்க வேண்டும்.

**சுருங்கக் கூறின் ஒவ்வொர் மக்களும் இனி வருங்காலத்தில் "பயிற்சி பெற்ற விடுதலைப்புலிகளே"**

### போராட்டத்தில் மருத்துவத்துறை

அடுத்து விடுதலைப் போராட்டத்தில் இன்றியமையாததாக உணரப்படுவது மருத்துவத்துறையாகும். இத்துறையின் சீர்குறைவாலும் சுகாதாரசீர்கேடுகளாலும் ஏற்படும் அநாவசிய உயிரிழப்பை தவிர்க்க மக்கள் ஒவ்வொருவரும் முன் வர வேண்டும் இன்று சமுதாயத்தில் நிலவி வரும் ஒவ்வொர் சுகாதார சீர்கேட்டையும் சீர்செய்வதுடன் ஒழுங்கமைவான மருத்துவத துறையையும் ஏற்படுத்த வேண்டும். இதில் ஒவ்வொரு மக்களும் முதலுவி சிகிச்சையனை தெரிநது கொள்வதும் இன்றியமையாதது.

### முழுமையான விடுதலையை நோக்கி

தமிழீழவிடுதலைப்போராட்டம் என்பது தமிழினத்தை சிங்கள பெருந்தேசிய வாதத்திடமிருந்து பாதுகாப்பதும் விடுவித்தலும் மட்டும் தான் என்ற குறுகிய வட்டத்தினூடானதென்பது மிகத் தவருனது. இந்த இன விடுதலை எம்மத்தியில் நிலவும் இனஅடக்குமுறைக்கெதிரான ஓர் தீர்வாக தான் அமையும்,

ஆனுல் எம் இனத்திற்குள்ளேயே நிலவும் சமூக சாதி மத அடக்குமுறைகள், பொருளாதார ஏறறத் தாழ்வுகள், பெண்ணடிமைத்தனமும் ஆணுதிக்கமுமான வரம்பு முறைகள் தகர்த்தெறியப்பட வேண்டும். இந்த அடக்கு முறைகளை எமமத்தியில் தொடர்ந்து பேணி வைத்துக் கொண்டு நாம் அமைக்கும் சுதந்திர தமிழீழம் ஒருபோதும் சுதந்திரமானதாக சுபீட்சமானதாக அமையமாட்டாது.

இந்த அடக்குமுறைகள் தகர்த்தெறியப்பட சமுதாய ரீதியாக அடக்கப்பட்ட எம் மக்கள் ஒன்றுதிரண்டு போராடவேண்டும். எம் இனத்தின் தலைவிதியை நாமே நிர்ணயித்து எல்லோரும் அணி திரள்வோம்

## தமிழீழப் பிராந்தியங்களில் தமிழீழ நிர்வாகம்

சிறிலங்கா அரசரீதியான நிர்வாக அமைப்புக்கள் போராட்ட காலகட்டத்தில் சீர்குலைந்து வருகின்றன. சிறிலங்கா அரசரீதியாக செயற்படும் சமுதாயத் தேவைகள் தமிழீழத்தினுடையதாக மாற்றப்பட வேண்டியதும் சிறிலங்கா அரசரீதியான நிர்வாக அமைப்பை தமிழீழ நிர்வாக அமைப்பாக தமிழீழ நிர்வாக அமைப்பின் கட்டுப்பாட்டினுள் மீண்டும் இயங்க வைப்பதும் இன்றியமையாதது

இன்று நிர்வாக அமைப்புகள் போதிய பலமின்மையாலும் பாதுகாப்பின்மையாலும் மக்களின் தெளிவின்மையாலும் சீர்குலைந்துள்ளன. சிறீலங்கா நிர்வாக அமைப்பின் சிவில் நிர்வாக ஒழுங்கை பேணவும் பாதுகாக்கவும் பொலிஸ்சேவை இயங்கியது. இன்று நிர்மூலமாக்கப்பட்டுள்ள பொலிஸ் சேவையால் சமுதாய ஒழுங்கினம் சமுதாயத்தின் அடி ஆணிவேர் வரை காணப்படுகிறது.

எனவே சிவில் நிர்வாக ஒழுங்கமைப்புக்காக இன்று நாம் செயற்படுவது தமிழீழ உருவாககத்திற்கு இன்றியமையாதது. இந்தவகையில் இன்று சட்டவிரோத சாராயத் தவறணைகள், மின் ஒழுங்கு விதிகளுக்குட்படாத மின்பாவனை சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு உட்படாத அனைத்து கடைகளும் எம்மால் தடைசெய்யப்பட்டுள்ளன.

மேலும் இதுபோன்ற பல் வேறுபட்ட நிர்வாகத்தின் ஒவ்வொர் அங்கத்திலும் மக்கள் நேரடி பங்காளர்களாகி ஓர் அமைப்பின் கீழ் கிராம ரீதியான நிர்வாகத்தில் ஈடுபடவேண்டும்.

தமிழீழ உருவாககத்திற்கு இன்றியமையாததாக விளங்கும் நெருக்கடிகால தமிழீழ பொருளாதாரத் திட்டமிடல் நாடளாவிய ரீதியில் நடைபெறவேண்டும். இத்துடன் சுதேச பொருளாதார அமைப்பை கட்டிஎழுப்ப ஒவ்வொர் மக்களின் பங்களிப்பும் இன்றியமையாதது.

இத்துடன் தமிழீழத்தின் சமூதாய ரீதியாக ஒவ்வோர் மக்கள் அனுபவிக்கும் சகலவிதமான அடக்கு முறையும் தகர்த்தெறியப்பட வேண்டும்

தமிழீழ உருவாக்கத்தின் போது ஒழுங்கமைக்கப்படும் ஓர் உறுதியான அனைத்து மக்களையும் உள்ளடக்கிய அமைப்பினூடாகவே இது சாத்தியமாகும்.

தமிழீழப் போராட்டத்தின் வெற்றிக்கு தேவையான அரசியற் தேவைகளை திட்டமிடுதலும் செயற்படுத்தலும் இவ் அமைப்பின் உயிரோட்டத்தில் ஒன்றுகலந்தது.

எனவே இன்றைய கால கட்டத்தில் தமிழீழ மக்கள் ஒவ்வொருவருக்கும் இப் போராட்டம் கையளிக்கப்படுகிறது. தமிழீழ மக்களும் இவ் உயிரோட்டத்தில். ஒன்று கலக்க வேண்டிய இன்றியமையாதது அத்தியாவசியமானது இத்தகைய சூழ்நிலையில் மட்டும்தான் தமிழீழம் உதயமாகும்.

### மக்கள் போராட்டம்

காலகாலமாய் சோகம் அமந்த எமது அன்னை பூமி இன்று தனது மக்களுக்கு ஒரு செய்தியை விடுகின்றது. "வேரோடு பிடுங்கி எறியப்பட்ட எல்லைப்பிரதேச மக்களைப் பாருங்கள், அனுதையாக்கப்பட்ட சிறுர்களைப் பாருங்கள், காவலரண்களை இரவு பகல் கண்துஞ்சாது பாதுகாக்கும் போராளிகளைப் பாருங்கள், இனிமையான இளமைக காலத்தில் மரணத்துடன் போராடும் போராளிகளைப் பாருங்கள், கடல்வலயம் தடுக்கும் கடற்றொழிலாளரைப் பாருங்கள், தனது மண்ணிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டு பட்டினிச்சாவுடன் போராடும் விவசாயியைப் பாருங்கள்.

இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவருக்கும் இவ் அவலங்களிலிருந்து தனது நாட்டை மீட்டெடுக்கும் கடமையுள்ளது. எல்லோரும் அணிதிரளுங்கள் சிதறிக் கிடக்கும் இந்தத் தேசத்தை மகோன்னதமிக்கதாக கட்டியெழுப்ப முன்வாருங்கள். இந்த மண்ணில் ஒரு புதிய நாகரீகத்தைக் கட்டியெழுப்பத் தோள் கொடுங்கள். உருக்குறுதியுடன் சாதனை படைப்பவர்களுடன் இணைந்து உங்கள் படைப்பாற்றலை வழங்குங்கள் ஒருவரோடொருவர் கரம் கோர்த்து அனைவரும் எழுவோம் பூவுலகின ஏனைய ஒடுககப்பட்ட மக்களுக்கு ஒளிவிளக்காய் நம்பிக்கை நட்சத்திரமாய் மாறுவோம.

இன்று வரை -
மக்களோடு புலிகள்
இன்றிலிருந்து

# மக்களே புலிகள்

தமிழீழ விடுதலைப் போராட்ட ஆயுதரீதியான தயாரிப்பு வேலைகள் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டன. 3 வருட உக்கிரபோராட்டத்தின் பின் இராணுவம் படிப்படியாக சரணடைந்து வருகிறது.

யாழ்ப்பாணம் + மன்னார் + கிளிநொச்சி + முல்லைத்தீவு + மட்டக்.... க + திரு . . . கோ + வ . . ன் . . . . + . . . . . ஆகிய பிராந்தியங்கள் படிப்படியாக எமது கட்டுப்பாட்டினுள் வந்துகொண்டிருக்கின்றன.

யாழ்குடாநாட்டு இராணுவ முகாம்களிலிருந்து தாம் வெளியேற மாதக்கணக்காக எடுத்து வரும் முயற்சிகள் பாரிய இழப்புகளுடன் பெரும தோல்வியில் முடிநததை தொடர்ந்து தம் நிலைப் புரிந்து கொண்ட இராணுவம் தரையிலும வானிலும் எமக்கு வெள்ளைக்கொடி காட்டி வருகின்றனர் புதிதாக உருவாக்கப்பட்ட சிறிய மினிமுகாம்கள தாககப்படுமோ என்ற அச்சத்தால் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் ஆயுதரீதியாக வெற்றி பெற்று வரும் இப் போராட்டத்தை சாதிவேறுபாடுகளற்றதுபொருளாதார,மத ஏற்றத்தாழ்வு களற்றதும ான சுதந்திரதமிழீழமாக பிரகடனபபடுத்த ஒவ்வொர் தமிழ் பேசும் மகனின் பங்களிப்பும் இன்றியமை யாதது.

இன்றைய காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டப்பாதை ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டப் பாதையாகும். இன்று முன்னெடுக்கப் படும் தேச விடுதலைப் போராட்டம தமிழீழ மக்களையும் மண்ணையும் பாதுகாத்து சிறீலங்கா நாட்டு அதிகாரப் பிடியிலிருந்து தமிழ் இனத்தின் பாரம பரிய பிரதேசங்களை மீடடெடுப்பதை அடிப்படையாகக் கொண்டது.

போராட்டத்தை விழுங்க காத்திருக்கும் சக்திகளுக்கெதிராக தமிழ் பேசும் ஒவ்வோர மகனும "தமிழீழம் என்ற சத்திய பிரமாணத்தோடு ஒன்றிணைந்திருந்தால்" மட்டுமே போராட்டத்தை காப்பாற்றி சுதந்திர தமிழீழத்தை வென்றெடுக்க முடியும்.

போராட்டம் இயல்பாகவே பல்வேறு நெருக்கடிகளையும் சொல்லொணாத் துயரங்களையும் தாங்கி முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. எனவே போராட்டத்தில் ஏற்படும் உயிர் உடமை இழப்புக்களை ஈடுசெய்வதுடன், அத்தியாவசிய தேவைக்கான நெருக்கடியை ஈடு செய்து போராட்டத்தை வென்றெடுக்க தமிழ் பேசும மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி இன்றியமையாதது.

தமிழீழத்தில் சீர்குலைந்துள்ள நிர்வாக அமைப்பிற்கு பதில் நிர்வாக அமைப்பை தோற்றுவித்தலுடன் விடுவிக்கப்பட்ட தமிழீழ பிராந்தியங்களுக்கு தமிழீழ தேச சட்டத்தையும ஒழுங்கையும் பேணி கிராமரீதியிலிருந்து தொகுதிரீதியாக மாவட்டரீதியாக நாடளாவிய ரீதியாக தமிழீழ மக்களாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும்.

இத்துடன் போராட்ட காலத்தில் தமிழீழத்தின் சமூக அரசியற் பொருளாதார தேவைகளை கிராம ரீதியிலிருந்து முழு மக்களையும் உளளடக்கி திட்டமிடுதலுடன் செயற் படுத்துதல் வேண்டும்,

இந்தவகையில் முழுமக்களும் தம்மை போராட்டத்தில் பங்காளர்களாக்கி கொள்ளும்பட்சத்தில் உருவாக்கப்படும் தமிழீழம் சகல விதமான அடக்குமுறை களுமற்ற சாதி வேறுபாடுகளற்றதும் பொருளாதார மத ஏற்றத்தாழ்வு களற்றதுமான சுதந்திர தமிழீழமாக மலர்வதற்குரிய அடிப்படைகளை படிப்படியாக ஏற்படுத்தி ஓர் மக்கள் விடுதலையடைந்த நாடாக தோற்றம் பெறும்

இமமக்கள் விடுதலையடைந்த தமிழீழ உருவாக்கத்திற்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் அனைத்து ஆற்றல்களும் போராட்டத்தின் பொருட்டு திசை திருப்பப்படவேண்டும் தமிழீழ மக்கள் அனைவரும் ஓர் அணியில் கீழ் ஓர் குடையில் கீழ் அங்கத்தவராக வேண்டும்

# மருத்துவக் குழு

## -தமிழீழ விடுதலைப் புலிகள்

ஓர் விடுதலைப் போராட்டத்தில் சுகாதார நிலைமைகள் சீர்குலைந்து வருவது இயல்பான ஒன்றே. ஆனால் விடுதலைப் போராட்டத்தில் உயிர்களைப் பாதுகாக்க ஒழுங்கமைவான மருத்துவத்துறையின் அவசியம். சுகாதார சேவைகளைப் பேணல் இன்றியமையாதது.

எனவே எம்மக்களைக் காக்க எமது பிரதேசங்களில் எழுந்துள்ள சுகாதார சீர்கேடுகளை சீர்செய்து சுகாதார நிலைமைகள் அபிவிருத்தியடையச் செய்ய வேண்டியது அவசியமாகும். பொது மக்களின் அக்கறையின்மையாலும் இத்துறைகளில் சம்பந்தப்பட்டோரின் ஒழுங்கீனத்தாலும் பல சுகாதாரப் பிரச்சனைகள் தோன்றியுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய சகல தமிழ் மக்களும் எம்மோடு ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

### இறைச்சி விற்பனை நிலையங்கள்

தமிழீழமெங்கும் இன்று எழுந்தமானமாக புதிய புதிய இறைச்சி விற்பனை செய்யும் நிலையங்கள் தோற்றம் பெற்று வருகின்றன. சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இந்நிலையில் சுகாதார அலுவலர்களின் எதுவித அனுமதியுமின்றியே இவை இயங்கிவருகின்றன.

எனவே இந்நிலையங்களில் விற்பனையாகிவரும் இறைச்சி பாவனைக்கு உகந்ததா என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் நோயற்றனவா என்று பரிசோதிக்கப் படுவதில்லை அத்துடன் வெட்டப்பட்ட இறைச்சி விற்பனைக்கு போகுமுன் உரியமுறையில் பரிசோதிக்கப்படுவதில்லை. இதனால் பலதரப்பட்ட நோய்கள் இன்று மக்களிடையே பரவிக் கொண்டு வருகின்றன.

நெருக்கடிமிக்க இச்சூழ்நிலையில் அதிகளவு போஷாக்கை மக்களுக்கு அளிக்கும் இறைச்சி விற்பனை நிலையங்களின் தேவை அதிகரித்துள்ளது. எனவே அனைத்து இறைச்சி விற்பனை நிலையங்களும் அதற்குரிய அனுமதியை பெற்று திறக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எமது பகுதிகளில் உள்ள சகல இறைச்சி (மீன்உட்பட) விற்பனை நிலையங்களும் சுகாதாரக் கண்காணிப்பின கீழ் அனுமதி பெற்று இயங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அனுமதி பெறாத சுகாதாரக் கண்காணிப்பின் கீழ் இயங்காத அனைத்து கடைகளும் எம்மால் தடை செய்யப்படும்.

மக்கள் தம்மைத் தாமே நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அனுமதி பெற்ற இறைச்சி விற்பனை நிலையங்களில் மாத்திரம் இறைச்சியை கொள்வனவு செய்யுமாறு கேட்டுக கொள்கிறோம். இந் நடவடிக்கையால் கால்நடைத் திருட்டுக்களும் முற்றாக ஒழிக்கப்படும்.

### உணவு விடுதிகள் தேனீர்க்கடைகள் பேக்கரிகள்

சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இந்நிலையில் எம் மக்கள் சொல்லொணா நெருக்கடிகளை அனுபவித்து வருகிறார்கள். இந்நிலையில் தமிழ் பேசும் மகன் எவர் ஒருவரும தம் சுயநலன்களை சுயவிருத்தியை முதன்மைப் படுத்தாமல் தமிழ் இனத்திற்குரிய உணர்வுடனேயே செயற்படவேண்டும். இருப்பினும் முதலாளித்துவ அமைப்பு முறையில் வளர்க்கப்பட்ட இச்சமூக அமைப்பில் ஓர் சிலர் தம் சுயவிருத்திக்காக முழு சமூக நலன்களையும் பாதிக்கும் விதத்தில் செயற்படுவதை கட்டுப் படுத்த வேண்டியது கண்டிப்பானதே.

உணவு விடுதிகள், தேனீர்க்கடைகள், பேக்கரிகள் சுகாதாரமற்ற முறையில் இதற்குரிய கட்டுப்பாட்டதிகாரிகளின் அனுமதியின்றி இயங்குவதை காணமுடிகிறது.

நடைபாதை உணவு விற்பனை சுகாதாரக் கேடாக அமைகிறது. திருவிழாக் காலங்களில் நடைபாதை உணவு விற்பனை காணப்படுகிறது.

அத்துடன் குளிர்பானங்கள் சுகாதாரமற்ற நிலையில் தயாரிக்கப்படுகிறது உடலிற்கு தீங்கு விளைவிக்கும் விதம் விதமான சீலைக்கு பாவிக்கும் சாயங்களால்நிறமூட்டப்படுகிறது'

இத்துடன் மக்கள் பாவிக்கும் உணவுப் பொருட்கள், உணவுகள், பழச்சாறுகள் ஐஸ்கிறீம், பாண் தரமானவையாகவும் உடலுக்கு தீங்கு விளைவிக்காமலும் இருக்கவேண்டும்.

எனவே இவைபோன்ற காரணங்களாலும் மக்களிடையே நீண்டகால சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படலாம். இவற்றுடன இவ்வகையான சுகாதார சீர்கேடுகளால் இன்று குடல் சம்பந்தமான நோய்கள் பரவி வருகின்றது.

எனவே எமது பிரதேசத்தில் உள்ள சகல உணவுவிடுதிகள் தேனீர்க்கடைகள், பேக்கரிகள் சுகாதாரக் கண்காணிப்பின் கீழ் கட்டுப்பாட்டதிகாரிகளின் கீழ் அனுமதி பெற்று இயங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எனவே மேற்குறிப்பிட்ட உரிமையாளர்சள் அனைவரும் எம் மக்களுக்கு தரமானதும் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்காததுமான உணவுப் பொருட்கள் கிடைக்க எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### முழுமையான ஆரோக்கியமான சமுதாயத்திற்காய்...!

இதே போலவே எம் மண்ணில் நிலவி வரும் சுகாதார ரீதியான அனைத்து சீர்கேடுகளையும் களைந்து ஆரோக்கியமான சமுதாயத்தின் உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டியது எம் முன் உள்ள கடமையாகும்.

இன்று பொதுத்தெருக்கள், பாதைகள், பாடசாலைகளில் குப்பை கூழங்களை கொட்டுதல், கட்டிடப் பொருட்களைப் போடுதல், மலம் கழித்தல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவை யாவும் கனத்த சுகாதார சீர்கேடுகளே! இதனால் சில சமயங்களில் வீதி விபத்துக்கள் கூட ஏற்படுகின்றன.

(7ம் பக்கம் பார்க்க)

# மொசாட் தமிழீழத்தின் தென் பகுதியில் மட்டுமல்ல.... யாழ்ப்பாணத்திலும் கூட!

தமிழ் பேசும் ஒவ்வோர் மக்களினதும் உயிரின் ஒளியாகிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட சிறிலங்கா அரசு பல்வேறு சதிமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேலிய மொசாட்டின் அனுசரணையுடன் செயற்பட்டுவரும் இனவெறி அரசு இன்று தமிழீழ மக்களிடையே குழப்பத்தையும் கலவரங்களையும் தூண்டி எமமைப் பிளவுபடுத்த முனைகிறது. போராட்டத்தை பின்னடையச் செய்யும் இச் சதிவலைக்குள் ஓர் சில சக்திகள் சிக்கி வருவது வேதனைக்குரியதும் சகிக்க முடியாததும் ஆகும். எனவே இன்றுள்ள யதார்த்த நிலைக்கான சூழ்நிலையில் இதற்கான காரணங்களை ஆராய்வோம்.

தமிழ் பேசும் மக்களிடையே பல்வேறு சாதி, சமய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. முதலாளித்துவ அமைப்பு முறையில் சந்ததி சந்ததியாக இவ் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து கொண்டே வருகின்றன.

சமுதாய அமைப்பு முறையில் இவ்ஏற்றத்தாழ்வுகளின் காரணியாக அவ் அவ் காலகட்டங்களில் ஆங்காங்கே ஒரு சில பிரச்சினைகள் சச்சரவுகள் ஏற்பட்டே வந்துள்ளன. இப் பிரச்சினைகள் சச்சரவுகள் அவ் காலகட்டத்தில் தீர்க்கப்பட்டன. ஒருபோதும் விஸ்வரூபம் எடுத்து பாரிய கலவரங்களாகவோ அல்லது சமூகங்களிடையே பாரிய பிளவுகளாக கூர்மையடைய தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் அனுமதித்ததில்லை.

## இராணுவ ரீதியில் தோல்வியுற்ற அரசின் சதி

இதே காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கியது. தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமக்கிடையேயான வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து தேச விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தேச விடுதலைப் போராட்டத்தினூடு அமைக்கப்படும் தமிழீழம் சகலவிதமான அடக்கு முறைகளும் அற்ற வகையில் சாதி வேறுபாடுகள் அற்றது, பொருளாதார, மத ஏற்றத்தாழ்வுகள் அற்றதுமான அரசாக மலர்வதற்குரிய அடிப்படைகளை படிப்படியாக ஏற்படுத்தவும் தொடங்கினர்.

கூர்மையடைந்து வரும் இவ் எழுச்சி மிகு போராட்டத்தை மழுங்கடிக்க சிறீலங்கா அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்தது. இராணுவரீதியாக தனக்கேற்பட்ட தோல்விகளை தொடர்ந்து தமிழீழ மக்களிடையே குழப்பங்களை கலவரங்களை ஏற்படுத்த கடுமையாக முயன்று வருகிறது.

இதன் ஓர் அங்கமாகவே தமிழ் - முஸ்லிம மக்களிடையே திட்டமிட்ட வகையில் கலவரங்களை தூண்டிவருகிறது. கடந்த காலத்தில் தமிழீழத்தின் தென் பகுதியில் ஏற்பட்ட இக் கலவரங்கள் இஸ்ரேலிய மொசாட்டின் உதவியுடன் சிறீலங்கா அரசாலேயே கொண்டு நடத்தப்பட்டது. இக் கலவரத்தில் தமிழ மக்களிடையேயுள்ள ஓர் சில பிற்போக்கு சக்திகளும் பங்கேற்றன.

இக் கலவரத்தில் தமிழீழ மக்களிடையேயுள்ள ஒரு சில பிற்போக்கு சக்திகளும் பங்கேற்றன என்பதை மறைப்பதற்கில்லை. ஆனால் இது குறித்து நாம் மெது தெளிவான பாதையையும். உண்மை நேர்மை நிலையினையும துணிகரத்துடன் சுட்டிக்காட்டி காட்டி கலவரத்தில் ஈடுபடும் அனைத்து சக்திகளையும் (ஓர் சில இயக்கங்கள் கூட இக் காலத்தில் பங்கேற்றன) கட்டுப்படுத்தி நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தோம்.

## போராட்டத்தில் இரண்டறக் கலந்து வரும் யாழ் முஸ்லிம் மக்கள் மத்தியில்

இதே சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இரண்டறக் கலந்து வரும் யாழ் முஸ்லிம் மக்களை பிளவுபடுத்த முயன்ற இனவெறி அரசின் சதி அண்மையில் ஒன்று அம்பலமாக்கப்பட்டது.

யாழ் முஸ்லிம மக்களிடையே உள்ள ஓர் சில பிற்போக்கு சக்திகளுக்கு சிங்கள அரசு கலவரத்தை, குழப்பத்தை தூண்டி விடுமபடி ஆயுதங்களை விநியோகித்தது இச் சதிவலைக்குள் அகப்பட்ட ஓர் சில பிற்போக்கு சக்திகள் அண்மையில் தமக்கிடையே எழுந்த ஓர் சிறு பிரச்சினைக்கு சிங்கள அரசு விநியோகித்த கைக்குண்டு ஒன்றை பாவித்தனர்

சிறீலங்கா அரசின் ஆலோசனையின்படி முஸ்லிம் மக்களிடையே வீசப்பட்ட இக் கைக்குண்டு 4 அப்பாவி முஸ்லிம் மக்களின உயிரைக் குடித்தது. ஏனைய 13 எம் சகோதரர்கள் காயமடைந்தனர்.

காத்திருந்த அரசு உடனேயே தனது பிரச்சார சாதனங்களில் விடுதலைப் புலிகளே இதற்குக் காரணம் என குற்றம் சாட்டியது.

எழுச்சியடைந்த முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் "இப் பிரச்சனையை பூரணமாக விசாரித்து அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும் பொறுப்பு உங்களுடையது'' என கண்டிப்புடனான உரிமையுடன் தெரிவித்தனர்.

மேலும் குண்டுவீச்சு சம்பந்தமான உண்மை நிலையை தமது அறிக்கை வாயிலாக அனைத்து முஸ்லிம பெரியோர்களும வெளி உலகின முன் வைத்தனர்.

இதைத் தொடர்ந்து நாம இக் குண்டுவீச்சு சம்பந்தமாக பூரண விசாரணையை மேற்கொண்டோம். குண்டு வீசியவர் முதல், அரசிடம் குண்டுகளைப் பெற்றவர்கள், குண்டுகளைப் பாதுகாத்தவர்கள் அனைவரும் எம்மால் கைது செய்யப்பட்டனர் அனைத்து ஆயுதங்களும் மீட்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் உட்பட்ட முஸ்லிம் மக்கள் உடனேயே சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் மரணதண்டனை வழங்கும்படி மிக ஆக்ரோஷத்துடன் கேட்டுக்கொண்டனர்.

(தொடர் பக்கம் - 7)



## பிரகாசம் மிக்க எதிர்காலத்திற்காக

தமிழீழம்
21-8-86

எம் மழலைகளின் தாய்தந்தையரே!
உற்றார் உறவினர்களே!!
வழிகாட்டுவோரே. பாதுகாவலர்களே!!
எம் மழலைகளின் நலம் அறிய ஆவல்.

ஓர் நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் குழந்தைகளில் தான் தங்கியுள்ளது. இந்த வகையில் தமிழீழத்தில் ஓர் பிரகாசம்மிக்க எதிர்காலத்தை உருவாக்குவதில் உங்கள் பணி முதன்மையானது.

பொதுவில் மண்ணில் வந்து பிறக்கும் போது ஒரே மாதிரியான நிலையில் உள்ள அனைவரினதும் வளர்ச்சி படிமுறைகளில் தான் அவரவர்களின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!!.

எனவே தான் நாம் ஒவ்வொருவரும் குழந்தை பராமரிப்பில் மிகுந்த கவனம் எடுக்கவேண்டியுள்ளோம் எதிர்காலத்தை நன்கு திட்டமிட்ட நாடுகள் குழந்தை பராமரிப்பில் மிகுந்த கவனமெடுக்கின்றன. உதாரணமாக உலகளாவிய ரீதியில் சோவியத் ரஸசியாவில் மிக அதிகமாக நிதி ஒதுக்கப்படும் ஒரே துறை ''சிறுவ, பராமரிப்பு' ஆகும்.

இத்துடன் இன்றைய தமிழீழ நிலையில் - இவ் போராட்ட காலகட்டத்தில் சிறுவர்களின் மனநிலை உளவியல்ரீதியாக கடுமையாக பாதிப்படைகிறது, இந் நாட்டின் வருங்கால வாரிசுகளுக்கேற்படும் பாதிப்பு தமிழீழத்தின் எதிர்காலத்தையே இருளடையச் செய்கிறது.

இயல்பான வளர்ச்சி நிலையில் வயது முதிர்வில் தான் குழந்தை சூழல் சுற்றுடலை கிரகித்துக் கொள்கிறது. ஆனால் இன்று எதையுமே தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத வயதிலுள்ள கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளங்களில் தினசரியான துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுச் சத்தங்களும் இம் மண்ணின் இரத்தங்களும் துன்ப துயரங்களும் பெருந் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந் நிலையில் இவற்றை ஜீரணிக்க முடியாமல் சின்னஞ்சிறுசுகளின் மனநிலை பெரிதும் பாதிப்படைகிறது. சிறுவயதில் மனநிலையில் ஏற்படும் கடுமையான பாதிப்பு, மனதில் ஏற்படும் விகாரம் மனித நாகரீகமற்ற சந்ததியின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும்.

மேலும் இன்று தினசரி இப்போராட்ட சூழ்நிலையில் எம செல்வச் சிறார்கள் எதுவித உயிரோட்டமுமின்றி பயப்பிராந்தியுடனும் பீதியுடனுமே தம் வாழ்நாளைக் கடத்துகின்றனர். இவை போன்ற பலவேறுபட்ட இன்றைய சூழ்நிலைகள் குழந்தைகளின் உடல் உள ரீதியான வளர்ச்சி நிலையைகடுமையாக பாதிப்படையச் செய்கிறது.

எனவே இன்றைய சூழ்நிலையில் நாம் குழந்தைகளின் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளோம். எம் நாட்டின் வருங்கால வாரிசுகளின் ஒழுங்கமைவான வளர்ச்சியில் தான் எம் எதிர்காலம் தங்கியுள்ளது.

எனவே இப்போரின் கடுமையான தாக்கங்களில் இருந்து எம் மழலைகளின் மனநிலை பாதிப்படையாமல் பேணுவது இன்று எம் முன் உள்ள முக்கிய கடமையாகும்.

எனவே அனைத்து பொது ஸ்தாபனங்களும், மக்கள் சேவை நிறுவனங்களும எம் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு ''சிறுவர் பராமரிப்பில்'' முழுமூச்சாக ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் அனைத்து தமிழ் பேசும் மக்களும் நம் நாட்டின் எதிர்கால சொத்துக்களாகிய மழலைச் செல்வங்களில அதிக அக்கறையுடன் அவர்களின் ஒழுங்கமைவான வளர்ச்சிக்கும் அவர்களின் சுபீட்சமான சுதந்திரமான வாழ்வுக்குமாக அயராது உழைக்குமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்
தமிழீழ மழலைகளின் சார்பில்

**புலிமாமா**

# தமிழ் ஈழ ஆய்வு நிறுவனம்

சிறிலங்கா அரசு எம்மை ஓர் எதிரி நாட்டைப் போல் கருதி எம் மக்களை ஜன்ம விரோதி போல நினைத்து முற்றாக ஒழித்துகட்ட கங்கணம் கட்டி செயற்பட்டு வருகிறது.

இதே நேரம் காலங்காலமாக எம்மக்களை அழித்து வந்த இனவெறி அரசின் கைகூலியாகிய சிங்கள இராணுவம் படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

இராணுவ ரீதியாக ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்து கூர்மையடைந்து வரும் போராட்டத்தை மழுங்கடிக்க சிங்கள அரசு தன் தந்திரோபாயங்களையும் செயற்திட்டங்களையும் மாற்றிக் கொண்டே வருகிறது. உருக்குப்போன்ற உறுதியுடன் போராடும் போராளிகளினதும் அவர்களுடன் அணிவகுக்கும் முழு மக்களினதும் மன உறுதியை குலைக்க எதிரி அண்மைக்கால வரலாற்றில் நடாத்திய விமானத் தாக்குதல்கள் எம் மக்களின் தற்காப்பு யுத்தத்தினாலும் விடுதலைப் புலிகளின் தீரத்தாலும் தியாகத்தாலும் படுதோல்வியைத் தழுவியது.

## இராணுவ அடக்கு முறையின் தோல்வியை அடுத்து...

ஆயுத ரீதியான முயற்சிகள் முற்றாகத் தோல்வியடைந்து எம் மண் விடுதலையைத் தொட்டுவரும் இந்நேரத்தில் எம் மக்களின் அத்தியாவசிய அன்றாட தேவைகளை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் இனவெறி அரசு இனிமேல் ஈடுபடும். மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவு, சக்தி போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு தோன்றும்

இந்த நிலைமைகளை நன்குணர்ந்து இன்றிலிருந்தே தீர்க்கதரிசனத்துடன் செயற்படாவிடில் நாளாந்த வாழ்க்கை சீர்குலைந்து பட்டினிச் சாவுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

சக்தி தட்டுப்பாட்டினால் விவசாயம், சமையல், போக்குவரத்து போன்றவற்றுடன் ஒவ்வோர் தொழிற் துறையும் ஸ்தம்பிதமாகும். இவை கிராமப்புற விவசாயத்தை பாதிக்கும் அதேசமயம் மக்கள் செறிந்து வாழும் நகர் புறங்களில் கடுமையான உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் உணவு பற்றாக்குறையாகும் அதேசமயம் உணவுப்பொருட்களின் பெறுமதியும் அதிகமாகும்.

இந்த நெருக்கடி நிலைமை மத்திய தர வர்க்கத்தினரை கடுமையாகப் பாதிக்கும் அரசிடமருந்து கிடைக்கும் சம்பளம், பென்சனுடன் வெளிநாட்டுப் பணமும் துண்டிக்கப்படும். இதனால் சகல தமிழ் பேசும் மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள்.

## எதிரியின் திட்டமிட்ட பட்டினி

தமிழீழத்தின் உணவு உற்பத்தி சாதாரண காலத்தில் சுயதேவையை முற்றாக பூர்த்தி செய்யக் கூடியதாயிருப்பதுடன் மேலதிகமானவற்றை சிறிலங்காவிற்கு ஏற்றுமதி செய்வதும் எம் மக்கள் நன்கறிந்ததொன்றே.

ஆயினும் இப் போராட்டகாலத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவு, வன்னி, மன்னார் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியங்களின் விவசாயத்தை அரச பயங்கரவாதிகள் ஆயுதமுனையில் சீர்குலைத்து வருகின்றனர். எனவே உண்மையில் உணவைப் பொறுத்த வரையில் தன்னிறைவை உடைய தமிழீழம் செயற்கை உணவுத்தட்டுப்பாட்டுக்குள்ளாகும்.

ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள இராணுவ முகாம்களும் உணவு மேலதிகமாகவுள்ள பகுதியிலிருந்து தேவையான பகுதிக்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும். இத்துடன் யாழ் குடாநாடு முற்று முழுதாக கொழும்பை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்பில் சிக்குண்டுள்ளது மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகள் ஒவ்வொன்றிற்குமே கொழும்பில் தான் தங்கிநிற்க வேண்டியுள்ளது

எனவே பொதுவாக தமிழீழமெங்கும் திட்டமிட்ட செயற்கையான உணவுத் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டாலும் மக்கள் மித மிஞ்சி செறிந்துள்ள யாழ்குடாநாடு தான் மிகக் கடுமையாகப் பாதிப்படையும்.

## நெருக்கடிகளை எதிர் கொள்ள அமைப்பாக்கப்பட்ட மக்கள் சக்தி

நெருக்கடி எத்துணை பெரிதான போதும் **அமைப்பாக்கப்பட்ட மக்கள் சக்தி** இவற்றையெல்லாம் வெற்றிகொண்டு இலட்சியத்தை அடைந்தே தீரும்.

எனவே தான் தமிழீழ விடுதலைப்புலிகள் முழுமக்களும் பங்கேற்றும் தம் மக்கள் அணிக்குள் தமிழீழ ஆய்வு நிறுவனம் எனும் அமைப்பொன்றை கட்டியெழுப்பி வருகின்றனர். இவ் அமைப்பு இந் நெருக்கடி காலத்தில் எழும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதுடன் நிச்சயம் ஒரு நாள் அடையவிருக்கும் சுதந்திர தமிழீழத்தின் அபிவிருத்திக்குரிய அத்திவாரங்களை இன்றே அமைத்து வருகிறது.

இந் நிறுவனம்

(1) விவசாயம்
(2) கால் நடை வளர்ப்பு
(3) கடலுணவு வளர்ப்பு
(4) உணவு பதனிடலும் பாதுகாத்தலும்
(5) கைத்தொழில்
(6) சக்தி
(7) பொருத்தமான தொழில் நுட்பம்

போன்ற துறைகளில் தனது ஆய்வுகளை நடாத்தி வருகிறது. பிற நாடுகளின் அனுபவங்களில் இருந்து புதிய திட்டங்களை எமக்கேற்ற விதத்தில் செயற்படுத்தி வருகிறது. மேற்கூறிய ஒவ்வோர் துறை பற்றியும் இந் நிறுவனம் திரட்டிய தகவல்களும் செய்முறை அனுபவங்களும் எமது பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு இனி வரும் காலங்களில் அறிமுகம் செய்வோம்

இந்த நடவடிக்கைகள் எவ்வளவு தான் காத்திரமாக விருந்தாலும் மக்களின் செயலூக்கமுள்ள பங்களிப்பில்லாவிடின் மொத்தத்தில் அது தோல்வியையே தழுவும். எனவே தான் நாம் மேற்கூறிய துறைகளில் மக்களை நேரடியாக பங்களிக்குமாறு கேட்கிறோம்.

# நெருக்கடி காலப் பிரச்சனைகளை வெல்ல தமிழீழ மக்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு

## ஒவ்வொரு அங்குலத்திலும் உணவு உற்பத்தி

விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால் ஒழுங்கமைவான திட்டமிடலுடன் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் உணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டும்.

கிராம ரீதியாக ஓர் விவசாய ஒழுங்கமைப்பு கட்டி எழுப்பப்பட வேண்டும். கைவிடப்பட்ட காணிகளிலும் தரிசு நிலங்களிலும் உணவுஉற்பத்தியில் ஈடுபட வேண்டும். எமது பிரதேசத்தில் குறிப்பிட்ட வகை உணவு பயிர்கள் வளரும். எனவே ஒவ்வொரு அங்குல நிலத்திலும் உணவுப் பயிர்களை பயிரிட வேண்டும். வேலியோரங்களில் கூட படரும் கொடிவகைகள் பயிரிடப்படவேண்டும் இன்றைய சூழ்நிலையில் வீட்டு மட்டத்தில் அமைக்கப்படும் பூந்தோட்டத்திற்கு பதில் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபட வேண்டும். மேலும் இயலுமான வரையில் ஆடு, மாடு, பன்றி, முயல், போன்ற கால்நடைவளர்ப்பிலும் கோழி, தாரா போன்ற பறவையின வளர்ப்பிலும் ஈடுபட வேண்டும்.

## உணவுபதப் படுத்தலும் சேமித்தலும்

மக்கள் இயலுமானவரை உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்த வேண்டும், இயலுமான குடும்பங்களில் ஒவ்வொர் குடும்பமும் ஒரு மாதத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை எப்போதும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். இன்று மக்கள் சேர்த்து வைத்திருக்கும் தங்கமும் வெள்ளியும் காசும் பட்டினியால் துடிக்கும் போது கடித்துச் சாப்பிட உதவாது. எனவே சேமிப்பை உணவுப் பொருட்களாக மாற்றுங்கள்

மேலும் தமிழீழத்திலுள்ள சகல உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்களும் தமது கையிருப்பை அதிகரிக்க வேண்டும்.

## வளங்களை முழுமையாக பாவித்தல்

இதுகால வரை எமது மக்கள் பெருமளவில் உண்ணாது கைவிட்ட உணவுவகைகளை உண்ணப் பழகுதல் வேண்டும்.

காட்டுத் தாவரங்கள் பிரண்டை போன்ற வறண்ட நிலத்தாவரங்கள் கடற்தாவரங்கள் இதர கடலுணவு வகைகள் மிகவும் சுவையானதுடன் சத்தானதாயும் இலகுவில் வளர்க்கப்படக் கூடியதாகவும் உள்ளது.

உதாரணமாக கடலிலிருந்து கிடைக்கும் அல்காக்களும், மட்டி, ஆளி போன்றவையும் சுவையுடன் சத்து மிகுந்ததாகும். இவை குறித்த விபரங்கள் தொடர்ந்து எமது பிரசுரங்களின் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும்,

இவை மட்டுமன்றி எம் பிரதேசத்திலுள்ள பாவிக்காத வளங்களை பாவிக்க பழகுதல் வேண்டும். உதாரணமாக கற்பகத்தரு என அழைக்கப்படும் பனைவளம் சகல விதமான தேவைகளையும் ஓரளவு பூர்த்தி செய்கிறது. இதன் வளத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

இவற்றோடு ஒரே உணவு வகைகளை மக்கள் சுற்றிச் சுற்றி வருவதைவிட்டு புதுப் புது உணவுகளை உண்ணப் பழக வேண்டும்.

## உணவு விநியோகம்

உணவு பயிரிடப்படுவதில் மட்டுமல்லாது ஓரிடத்திலிருந்து தேவையான விடத்திற்கு போக்குவரத்து செய்வதிலும் மக்கள் சக்தி பயன்படுத்தப்படல் வேண்டும். எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் இராணுவமுகாம்களினூடான போக்குவரத்திலும ஏற்படும் இடர்பாடுகளாலும் உணவு ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு கொண்டு செல்வதில் தடங்கல் ஏற்படுமாயின் ஏற்கனவே அமைப்பக்கப்பட்ட மக்கள் சைக்கிள் மூலமாகவோ அல்லது இதர சிறுரக வாகனங்களினூடாகவோ முகாம்களைத் தவிர்த்துச் செல்லும காட்டுப் பாதைகளினூடு சிறு சிறு பொதிகளாக்கப்பட்ட உணவை அலை அலையாக எடுத்துச் சென்று தேவையான இடத்தில் சேர்ப்பித்த வரலாற்றை எமக்களித்திருக்கின்றனர் வீரவியட்னமியா.

## சக்திக்காக...

இனி எரிபொருள் தடடுப்பாடு ஏறபடுவதை எவவாறு குறைக்கலாம். என்று நோக்க வேணடும். பொதுவாக சமையல் போக்குவரதது ஒளியூட்டல் சகதி போன்றனவற்றிற்கே எரிபொருள் பயன்படுததப் படுகிறது. எனவே மக்கள் இயலுமானவரை இயற்கையாக கிடைககும் சகதி வலகைகளை (மரம்) போன்றன பெருமளவில் பயன்படுத்த வேணடும.

எனவே மககள் இது போனற பலவேறு காரணிகளுக்காக மரங்களை நாட்ட வேண்டும்.

இத்துடன் இன்று நடை முறைக்கு வந்துள்ள மாற்று எரிபொருடகளை பாவிகக முன் வரவேண்டும். உயிரியல வாயு சமையலுக்கும் ஒளியூட்டவும் ஏனைய மின்சார உபகரணப் பொருட்களுக்கும் பாவிக்கப்படுகிறது சூரிய சக்தி சமையலுக்கும் மற்றும் மின்சக்தியாகவும் பயன்படுகிறது. காற்றுச்சக்தி தணணீர் இறைக்கவும மின்சாரம் பெறவும் பயன்படுகிறது.

இன்னும் பலவிதமான இயற்கையான சக்திகளை எமது தேவைக்கு வென்றெடுக்கும் ஆராய்ச்சிகள் உலகு முழுவதும் நடைபெறுகிறது. இதைப்பற்றிய சாத்தியமான செயற்திட்டங்கள் குறிதது மக்களுக்கு அறிமுகபபடுத்துவோம். இவ்வாறான மாற்றுசக்திகளை பயன்படுத்துவது மக்களின் கடமையாகும. அத்துடன் இவ்வாறான புதுவகை சக்திகளை எமது அன்றாட வாழ்விற்கு உபயோகிப்பது எவ்வாறு என்பது குறித்து எமது அறிஞர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் மேலும் ஆராயந்து அபிவிருத்தி செய்ய வேண்டும.

# தமிழீழம் தழுவிய பிரச்சனைகளில்

## தமிழீழ சுய ராஜ்ஜிய ஸ்தாபிப்புக்காக தமிழ்பேசும் எவர் ஒருவரும் இந்நாடு தழுவிய பாரிய பிரச்சினைகளில் தம் உணர்வுபூர்வமான பங்களிப்பை வழங்குமாறு உரிமையுடன் ---

அதிகரித்து வரும் சனத்தொகையின் காரணமாக நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு பிரச்சனைகள் தலையெடுக்கின்றன. உணவு, உறைவிடம் என்பவற்றுக்கான தேடுதலும் அதிகரிக்கின்றது. குடிசன நெருக்கம் அதிகமாகவுள்ள தமிழீழத்தின் சிலபகுதிகளில் - குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் - பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகளால் வீட்டு நிலத்திற்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதனால் பலர் இதுவரை காலமும் வீட்டு நிலமாகக் கருதப்படாத காணிகளை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பி வருகின்றனர். இவர்களது வீடமைப்புத் தேவைக்கு இலகுவாகக் கிடைக்கக்கூடியவாறு இருப்பது விவசாயம் செய்யப்படும் வளமான நிலங்களேயாகும்.

ஆரம்பத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக விவசாயக் காணிகளில் முளைத்து வந்த வீடுகள் இன்று பல்கிப் பெருகி வருங்காலத்தில் குடாநாட்டினுள் வவசாயமே நின்றுவிடுமோ எனும் அளவுக்கு வந்திருக்கின்றது. வளமான மண்ணைக்கொண்ட விவசாயக் காணிகள் இவ்வாறு சீமெந்துக் கட்டிடங்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாவதன் காரணம் என்ன?

நாம் ஏற்கனவே கூறியவாறு வேகமாக அதிகரித்து வரும் குடிசன அதிகரிப்பினால் வீட்டுத் தேவையும் அதிகரித்துள்ளது. இருக்கும் காணிகளில் எல்லாம் சிறிதும் பெரிதுமாக ஒழுங்கற்ற முறையில் குடியிருப்புகள் உருவாகத்தொடங்கியுள்ளன. இதனால் இருக்கும் நிலவசதி திட்டமிட்ட அடிப்படையில் உச்சமாகப் பயன்படுத்தப்படாது வீடுகள் எழுந்தமானமாக உருவாகி வருகின்றது. சரி, இவ்வாறு உருவான வீடுகளாவது சரியான விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதா என்றால் அதுவும் இல்லை. தேவைக்கதிகமாக நிலத்தை அடைத்துக் கொண்டு உருவாகிய பெரிய பங்களாக்களில் மூன்று அல்லது நான்கு பேர் மாத்திரமே வசிக்கின்றனர். நகர்ப்புறத்திலும் நகரைச்சார்ந்த சுற்றுடல்களிலும் பலவிடங்களில் கிடைக்கும் நிலத்தடி நீரும் எமது மக்களின் காலாதிகாலமாக சமூக, கலாச்சார நடைமுறைகளும் அவர்களைக் குடாநாட்டுக்குள்ளிருந்து வெளியேறாது குறுக்கி விடுகிறது.

தமது உறவினர் இருக்கும் பகுதிகளிலேயே இருக்க விரும்பும் தன்மையினாலும் குடாநாட்டிற்கு வெளியே சென்று குடியேறுவதைத் தவிர்க்கின்றனர். தொழில் நடவடிக்கைகளுக்காக வெளியேறினாலும் தமது இறுதிக் காலத்தில் சொந்த ஊரில் ஒரு வீடு இருக்க வேண்டும் என்ற விருப்பு அதிகமானோரிடம் காணப்படுகிறது. இதைவிட குடாநாட்டினுள் கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு வசதிகள் ஒப்பீட்டளவில் தமிழத்தின் ஏனைய பகுதிகளை விட அதிகமாகவுள்ளதுவும் இவர்களை வெளியேறாது கட்டுப்படுத்துகின்றது. இதைவிட குடியேறிய சிங்கள மக்களுடன் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக எல்லையோர தமிழ்ப்பகுதிகளில் தமிழ்மக்கள் தமக்குப் பாதுகாப்பில்லை என்று கருதுகின்றார்கள். இவ்வாறான காரணங்களினால் குடாநாட்டினுள் குடிசன நெருக்கடி என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

பலவித காரணங்களினால் தமிழ்ப்பகுதிகளிலிருந்து சிறீலங்காவிற்கோ அல்லது வேறு வெளிநாடுகளிற்கோ சென்றுள்ள தமிழ் மக்கள் தமிழீழம் எதிரியி மிருந்து விடுவிக்கப்பட்டவுடன் தமது சொந்த நாட்டிற்கு பெருமளவில் திரும்பி வரும்! சாத்தியக்கூறையும் கணக்கிலெடுத்தல் நிலத்தட்டுப்பாட்டுப் பிரச்சினை ஒரு பெரிய அச்சுறுத்தலாகவே இருக்கிறது.

இவ்வாறு பலவித காரணிகளால் உருவாகி வரும் வீட்டு நிலத்தட்டுப்பாட்டிற்கு எமது மக்கள் கண்ட தீர்வு என்ன? இதுவரை காலமும் செய்கை பண்ணப்பட்டு வந்த தோட்டக்காணிகள் குடியிருப்பு நிலமாக மாற்றப்படும் ஒரு அபாயகரமான சூழ்நிலை தான் இன்று உருவாகியுள்ளது. தோட்டக்காணிகள் பொதுவாக நல்ல குடிதண்ணீர் வசதியுடையவை. ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பொருளாதாரக் கொள்கைகளினால் விவசாயத்தில் ஆர்வம் குறைந்ததுவும், இதனால் செய்கை பண்ணப்பட்ட தோட்டக்காணிகள் கைவிடப்பட்டதும் இவ்வாறு கைவிடப்பட்ட தோட்டக்காணிகளை கணிசமானதொரு தொகை வரும் போது குடியிருப்புக்கு விற்கப்படுவதும் தற்போது அதிகரித்துள்ளது. இவ்வாறான காரணங்களால் வளமான மண்ணைக் கொண்ட காணிகளில் கிடுகிடுவென வீடுகள் உருவாகி வருகின்றது. குறிப்பாக போக்குவரத்து வசதிகளைக் கொண்ட பிரதான வீதிகளின் ஓரங்களில் உள்ள தோட்டங்களில் வீடுகள் உருவாகுவதைப் பரவலாகக் காணலாம். இவற்றினால் வரும் பாதிப்புகளைச் சற்று நோக்குவோம்.

திட்டமிடாத அடிப்படையில் தோட்டக்காணிகளில் இடக்கு முடக்காக வீடுகட்டுவதனால் உழுதல், போன்ற மற்றும் இதர வேலைகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் அனாவசியத் தடங்கலும எண்ணெய் பாவனை அதிகரிப்பும் ஏற்படுகின்றது வெள்ள வடிகால் வசதிகள் கருத்திற் கொள்ளப்படாமையினால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது.

போராட்டம் உக்கிரமடைய தமிழீழப் பிரதேசங்களின் தொடர்பு துண்டிக்கப்படலாம் வெளி மாவட்டங்களுடனான தொடர்புகள் அறுக்கப்படலாம். இதனால் விவசாயத்தில் நாட்டமற்ற பிரதேசங்கள் உணவுத்தட்டுப் பாட்டினால் பாதிக்கப்படலாம். இதைவிட எதிரியினால் தோட்டங்கள் வயல்கள் என்பன எரியூட்டப்படலாம். தனது வழிகாட்டியான அமெரிக்கா வியட்னாமில் செய்ததை அடியொற்றி இங்கும் சிங்கள கூலிப்பட்டாளங்களினால் விவசாயப் பிரதேசங்கள் வானிலிருந்தோ அல்லது தரையிலிருந்தோ சிதறப்படும் இரசாயன நச்சுமருந்துகளினால் அழிக்கப்படலாம். இதன் மூலம் செயற்கையான உணவுத்தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்தி எம்மை பணிய வைக்க சிங்கள அரசு முனையும். இளர்ந்தெழுந்த பயாபரா எனும் சிறு பிரதேசமொன்று இவ்வாறு பட்டினி போடப்பட்டு பணிய வைக்கப்பட்ட கரிய வரலாறு ஒன்று ஏற்கனவே இருப்பதால் நாமும் எமது முன்னெச்சரிக்கையின்மையால், அலட்சியத்தால் பணிந்து விட வேண்டிய நிலை வரக்கூடாது

எனவே இதற்குத் தாக்குப் பிடிக்க சகல பிராந்தியங்களும் சிறு சிறு பிரதேசமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலுமுள்ள பயன்படுத்தக் கூடிய காணிகள் முழுவதும் உணவுற்பத்தியில் முடுக்கிவிடப்பட வேண்டும். எனவே இருக்கும் நிலவளமானது உச்சமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் இதன் மூலம் ஒவ்வொரு சிறு பிராந்தியமும் தம்மளவில் உணவில் தன்னிறைவு அடையச் செய்ய வேண்டும். இதை நோக்காகக் கொண்ட எமது திட்டத்திற்கு வளமான காணிகளில் வளரும் சீமெந்துக்கட்டிடங்கள் எவ்வளவு இடையூறாக இருக்கும் என்பதை விளங்கிக் கொள்வது கடினமல்ல.

இனி வரும் காலத்தில் போராட்டம் வலுப்பெறும் போது அரசு தற்போது வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கும் ஏராளமான நவீன யுத்த விமானங்களைப் பாவித்து மக்களை அழித்தொழிக்க முனையும். வானிலிருந்து குண்டுமழை பொழிவதற்கு எதிரி எப்போதும் தேர்ந்தெடுப்பது நெருக்கடி மகுந்த நகர்ப்புறங்களும் பொருளாதார, இராணுவ கேந்திர ஸ்தானங்களும் தான். இதன் மூலம் அவன் தனது ஒவ்வொரு வெடிகுண்டையும் தப்பாது பாவிக்க முனைகிறான். ஏற்கனவே எமது பகுதியிலிருக்கும் குடிசன அடர்த்தி மிகுந்த பகுதிகள் மேலும் பரவினால் இவ்வகையான ஆபத்தைச் சமாளிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டி நேரிடும்.

இவ்வாறு துரிதமாக முளைத்துவரும் வீடமைப்புக்களினால் எதிரிக்கு வசதியான இலக்குகளை நாமே அமைத்துக் கொடுப்பது போலாகிவிடு ஏற்கனவே இருக்கும் குடியிருப்புகளை விடமேலும் மேலும் கட்டப்படும் படாடோபமான மாளிகைகள் அனாவசியமானதே. விமானத் தாக்குதல்கள் மூலம் பலலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்படலாம் பெரும்பாலான மக்கள் போராட்ட காலத்தில் விமானத் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு 'பங்கர்' எனப்படும் நிலக்கீழ் பாதுகாப்பரண்களிலேயே வாழ்வர். உலகெங்கும் நடைபெற்ற போராட்டங்களின் போது மக்களின் வழ்க்கை இவ்வாறுதான் இருந்திருக்கிறது. இலண்டன் போன்ற மாபெரும் நகரங்கள் கூட இரண்டாம் உலக மகா யுத்த காலப்பகுதியில் இதற்குத் தப்பவில்லை.

நாம் எதிரிக்கு எதிராக வெற்றிகளை குவிக்கும்போது எதிரியின் மூர்க்கத்தனம் இவ்வாறு எம்மைப் பயமுறுத்தி அடிபணிய வைக்க முயலும் இவ்வாறான பொருளாதார மனித உயிர் அழிவுகள் மூலம் இதுவரை காலமும் பணியாத எம் மக்கள் இனியும் பணிந்து விடப் போவதில்லை என்பதை நாம் உணர்ந்திருந்தாலும் தேவையற்ற அழிவுகளைக் குறைக்க வேண்டும். இவ்வாறு உருவாகும் டாம்பீக மாளிகைகளில் வீணாக முடக்கப்படும் 'முதல்' அழிந்தொழிக்கப்படலாம்.

எமது மக்களிடையே பரவலாகக் காணப்படும் குறை என்னவென்றால் தாம தேடி வைத்திருக்கும் பணத்தை உற்பத்தியைக் கொடுக்கும் தொழிற்சாலையிலோ அல்லது விவசாய விளைநிலத்திலோ முதலிடாமல் வீடு, நகை போன்ற உற்பத்தியைத் தராத அசையாத முதலீடுகளாக மாற்றிக் கொள்வதாகும். உற்பத்தியில்லாத சமூகம் நிலைத்து நிற்காது. எனவே உற்பத்தியைப் பெருக்க வளை நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

வீடு கட்டுவதற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் மா, பலா, தென்னை, பனை முதலிய மரங்களடர்ந்த தோட்டங்கள் அழிக்கப்படுகின்றன. இவை எமது உணவுக் கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது எமது சுற்றுடல் மாசுபடுவதற்கும் காரணமாகின்றது ஏனைய நாடுகளிலுள்ள நகரங்களில் இது இன்று ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மரங்கள், சோலைகள் அற்ற கொங்கிறீட் வனாந்தரங்கள் எனப்படும் நெருக்கடியான குடியிருப்புகளின் மூலம சுற்றுடல் பாதிக்கப்பட்டு சுகாதாரச் சீர்கேடுகள உருவாக அதிக வாய்ப்புளளது. அத்துடன் தாவரங்களால் பாதுகாக்கப்படாத மண் இயல்பாகவே நீர், காற்று அரிப்பிற்கு உட்படும். வளமான மேற்படை மண் அரிப்புக்குள்ளாகி பாரிய பாலைவனங்களை உருவாக்கி விடும்.

அப்படியாயின் நாம் நகரங்கள் அபிவிருத்தியடைவதை (நகர மயமாவதை) எதிர்க்கின்றோமா என்ற கேள்வி எழக்கூடும். இல்லை! நாம் கூறுவதெல்லாம் திட்டமிட்ட நகர நிர்மாணங்கள் (விடுதலையின் பின்) உருவாக வேண்டும். செழிப்பான தோட்டக்காணிகளில் சீமெந்துக் கட்டிடங்கள் உருவாவது தவிர்க்கப்பட வேண்டும். பரந்து கிடக்கும் விவசாயத்திற்குப் பயன்படாத காணியிலேயே நகர அபிவிருத்தி உருவாக வேண்டும் என்பதே. தத்தமது குறுகிய தனிப்பட்ட நலன்களையே கருத்திற் கொண்டு ஏற்படும் திட்டமிடப்படாத வீடமைப்பு, நிருமாணத் திட்டங்களைக் கொண்ட முதலாளித்துவ நாடுகளில் பெறுமதிமிக்க விவசாய நிலங்கள் நகர அபிவிருத்தி என்ற போர்வையில் விழுங்கப்பட்டு வருவது ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளினால் இதுவரை 500 கோடி ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலம் விவசாயமற்ற பாவனைக்கு மாற்றப்பட்டுள்ளது. அதாவது வளமான நிலப்பகுதியான முழுமையான கண்டம் ஒன்று விவசாயப் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு விட்டது. சமீப காலங்களில் இந் நடவடிக்கை மேலும் துரிதமாகி வருகின்றது. இது உலகளாவிய ஒரு பிரச்சினையாகும். இச்சூறாவளிக்குள் நாமும் அகப்பட்டு எமது தனிப்பட்ட நலன்களை மாத்திரம் நோக்காகக் கொண்டு விவசாயக் காணிகளை விழுங்கி விடுவோமேயானால் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை எமது அடுத்த சந்ததியினர் தான் அனுபவிக்க வேண்டி நேரிடும்.

இன்று எதிரிக்கெதிரான யுத்தம்விடுதலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது எமது தேசிய விடுதலை அடைந்தவுடன் புரட்சியின் அடுத்த கட்டமாகிய நிர்மாண காலகட்டம தொடங்கும். அப்போது மக்களின் அடிப்படைத் தேவைகளிலொன்றான வீட்டு வசதிகள் பரவலாக்கப்படும் தொடர்மாடிக் கட்டிடங்கள் அமைத்தல், கரையோரப் பகுதிகள், விவசாயம் செய்ய முடியாத உவர் நிலங்கள் போன்றவற்றில் வீடுகள் கட்டுதல் மூலமும் குடாநாட்டிற்கு வெளியே குடியேற்றங்கள அமைத்தல், ஊக்கமளித்தல் மூலமும் விளை நிலங்களைப் பாதுகாத்து வீட்டு நிலத் தட்டுப்பாடடுப் பிரச்சனை தீர்க்கப்படும். இவ்வாறான குடியேற்றத் திட்டங்களுக்கு நல்ல போக்குவரத்து. சுகாதார கல்வி, கலாச்சார நடவடிக்கைகளிற்கான வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கைகளில் எடுக்கப்படும் இவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் நாடு, நகர அபிவிருத்திகள் மூலம் நில நீர் பாவனையை உச்சப்பயன்பாட்டில் கொண்டு வரலாம்.

இத்துடன் இப்போராட்ட காலகட்டத்தில் அனைத்து செய்முறைகளும் போராட்டத்தின் பொருட்டே திசைதிருப்பப் பட வேண்டியுள்ளன, உதாரணமாக இன்று சந்திக்கு சந்தி நிறுவப்படும மினிசினிமாக்கள், சாராயத் தவறணைகள் போன்றவற்றிற்கு பதிலாக தொழில் நிலையங்கள், சிறுகைத்தொழில்கள் உருவாக்கப்பட வேண்டும்.

எனவே இறுதியாக தமிழ் பேசும் மகன் ஒவ்வொருவரும் சுதந்திர தமிழீழ நிர்மாணத்திற்கு எதுவித இடையூறும் ஏற்படாமல் தமது ஒவ்வோர் ஆற்றலையும் போராட்டத்தின் பொருட்டு திசைதிருப்பின் மட்டுமே சுதந்திர தமிழீழம் உதயமாகும்.

# மக்களோடு புலிகள்

இன்றைய போராட்ட சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் ஒவ்வோர் தேவைகளையும் நிலமைகளுக்கேற்ற செயற்திட்டங்களையும் உதவிகளையும் புரிந்து வருகிறார்கள். புலிகளோடு மக்களும் ஒன்றிணைந்து தத்தமது நெருக்கடிகால தேவைகளை பூர்த்தி செய்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒன்று கலந்து வருகிறார்கள்.

## மக்களுக்காக புலிகள்

அன்றைய போராட்ட முறையில் தாக்குதலுக்கு பின் எதிரி தன் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடாக மக்களை கொல்லுவதிலிருந்து "மக்கள் பாதுகாப்பு" சம்பந்தமாகவும் இதில் மக்கள் பங்களிப்பு பற்றியும----

சுதேச பொருளுற்பத்தியினதும், பாவனையினதும் அத்தியாவசியம் பற்றியும் உள்ளூர் உற்பத்திக்குழுவோடு மக்களின் ஒன்றிணைப்பு சம்பந்தமாகவும்---,--

இம் மண்ணின் கலாச்சார நிகழ்வுகள் பற்றியும்

இன்றைய நெருக்கடி நிலையில் உணவு உற்பத்தியின் அத்தியாவசியம் பற்றியும் உணவு உற்பத்திக்குழுவோடு மக்களின் ஒன்றிணைப்பு சம்பந்தமாகவும்-------

வெந்த புண்ணில் வேல்பாய்வது போல இடம்பெற்ற இயற்கை அழிவுகளிலும்; மக்களின் பாதுகாப்புடன் புனர்வாழ்விற்காக செயற்பாடுகளல் இறுவரை மக்களுக்கு கை கொடுக்கும் களப்புலிகள் சம்பந்தமாகவும்--- -

ஓர் எதிரிநாட்டைபபோல் இங்கு இடம்பெறும் பாரிய குண்டுவீச்சு விமானங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பு பற்றியும்------

கடந்த காலங்களில் கருத்து வெளியிட்டிருந்தோம்.

நெருக்கடி நிலையில் மக்களின் அன்றாட பிரச்சினைகள் தேவைகளை மையமாகக் கொண்டே போராட்ட ஆரம்ப காலத்தில் காலத்தின் தேவையாக "மக்களோடு புலிகளின்" ஒன்றிணைந்த பங்களிப்பு இவ்வகைகளில் அமைந்தது.

ஆனால் இன்று நேரடிப் போராட்ட சூழ்நிலை தோற்றம் பெற்றுவிட்டது பல்வேறுபட்ட பிராந்தியங்கள் விடுவிக்கப்பட்ட - விடுதலையடைந்துவிட்ட பிராந்தியத்திற்குரிய சூழ்நிலையை தொட்டுவிட்டது.

விமானப் படையின் ஓர் சில அடாவடித்தனத்தை விட இராணுவ முகாம் வாசலிலே தவமிருக்கும் விடுதலைப்புலிகளின் காவற்படையால் இராணுவ முகாம்கள் சிங்கள சிப்பாய்களின் சிறைச்சாலையாகி விட்டது.

யாழ்குடாநாடு, கிளிநொச்சி, மன்னாரில் இப்பிராந்திய கட்டுப்பாட்டு சூழ்நிலை நிலவுகிறது. ஏனைய பிராந்தியங்களான வன்னி, மட்டக்களப்பு, திருமலை அம்பாறை மாவட்டங்களும் படிப்படியாக கட்டுப்பாட்டினுள் வந்து கொண்டிருக்கின்றன.

மூன்று வருடத்திற்கு முன் இரட்டை இலக்கத்திலிருந்த போராளிகளின் எண்ணிக்கை இன்று இவ் வரலாற்று முக்கியத்துவமான சாதனையை படைத்திருக்கிறது. இதே வளர்ச்சி நிலையில் விமானப்படை முறியடிக்கப்பட்டு நம் மண்ணில் இருந்து எதிரி முற்றாக விரட்டியடிக்கப்படும் காலம் வெகு தூரத்திலில்லை.

எனவே இராணுவ ரீதியில் தமிழீழம் முற்று முழுதாக தயார்பட்ட சூழ்நிலையடைந்து விட்டது.

ஆனல் நாம் இராணுவரீதியில் விடுதலையடைதல் மட்டும் ஓர் சுயராஜ்யத்தை - தமிழீழத்தை ஸ்தாபித்துவிட முடியாது.

## இனி......

## மக்கள் தான் புலிகள்

தமிழீழ போராட்டத்தை மழுங்கடிக்க பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் காத்திருக்கும் இவ் வேளையில் (அதாவது சிறிலங்கா அரசு "மாத்திரம்" எதிரியல்லா இச் சூழ்நிலையில்) இப் போராட்ட விரோத சக்திகளை இராஜதந்திர ரீதியில் முறியடித்து தமிழீழத்தை வென்றெடுக்க தமிழ்பேசும் மக்களின் அனைத்து ஆற்றல்களும் போராட்டத்தின் பொருட்டு திசை திருப்பப்பட வேண்டும். சகல மக்களும் தமிழீழத்திற்கான அணிவகுப்பில அணி திரளவேண்டும்.

இன்று தமிழீழத்தின் தென்பகுதியில தினசரி பத்து பதினைந்து அப்பாவித தமிழ் உயிர்கள் பலிக்கடாக்களாக்கப் கொண்டிருக்கின்றன. வடக்கில் முகாம் வாசலில் தவமிருக்கும் விடுதலைப் புலிகள் தினசரியான நேரடி யுதத்தில் மக்களை காக்க தம் உயிர்களைக் கொடுத்துக் கொணடிருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் தமிழீழம் முழுவதிலும் தினசரி இரு தியாக வேங்கைகளின் மூச்சுக் காற்றுவது தமிழீழக் காற்றுக்களில் சங்கமித்துக் கொண்டிருக்கின்றது.

இராணுவம் தான் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலை உள்ள பிராந்தியங்களில் "ஷெல் ஆட்டிலரி" தாக்குதலோடு விமானப் படையும் இணைந்து இன ஒழிப்பை புரிய முனைகிறது.

இந்தவகையில் தமிழினம் சிறிலங்காவின் பூரண எதிரியாக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் தமிழீழம் தவிர்ந்த வேறெந்த தீர்வும் தீர்க்கதரிச நோக்கில் எம் மக்களின் சுபீட்சமான சுதந்திரமான சமத்துவமான வாழ்வுக்கு வழிவகுக்காதென்பது முடிந்த முடிவு.

தமிழீழத்திற்கான சுயராஜ்ய விஸ்தரிப்பு வேலைகள் ஓரளவு பூர்த்தியடைந்து விட்ட இந்நிலையில் விடுவிக்கப்பட்ட சுதந்திர தமிழீழ பிராந்தியங்களை நிர்வகித்தலோடு தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க ஓர் சரியான அரசியற் கருத்தின் கீழ் கட்டப்பட்ட சகல மக்களும் அங்கத்துவம் வகிக்கும், மக்கள் அணி இன்றியமையாததாகிறது.

கிராம ரீதியாக மக்கள் தம்மை தாமே நிர்வகித்து சீர்குலைந்துள்ள சிவில் நிர்வாக அமைப்பிற்கு பதில் நிர்வாக அமைப்பை தோற்றுவித்தது போராட்ட கால கட்டத்தில் எழும் சமூக அரசியற் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வென்றெடுத்து தனித் தமிழீழத்தை ஸ்தாபிக்கும இம்மக்கள் அமைப்பு வரலாற்றின் தேவையாக அமைகிறது.

# ஒழுங்கமைக்கப் படவேண்டிய பல்கலைக் கழகம்......

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றின் முன்னோடியாக தமிழ் மாணவர் பேரவையின் தோற்றமும், சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கெதிராக எழுச்சியுற்ற ஆயுதரீதியான போராட்ட முன்னெடுப்புகளும் திகழ்கின்றன. அரசின் அடக்குமுறை பன்முகபபட்டதாயிருந்த போதும் உயர் கல்வி மீதான தரப்படுத்தலும அதைத் தொடர்ந்த மாணவர் போராட்டங்களுமே தமிழீழ விடுதலைப் போரின் அத்திவாரமாக அமைகிறது.

இந்த வகையில் அமைந்த மாணவர் பங்களிப்பின் மத்தியில் இன்றைய பல்கலைக்கழக நிலையை ஒப்பு நோக்க வேண்டியுளளது.

தமிழீழம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் பல்கலைக் கழகங்களில் இடம் பெறும் "ராக்கிங்" எனும் வன்முறை அட்டகாசமும் ஏனைய கேளிக்கை நிகழ்ச்சிகளும் முழுப் பல்கலைக்கழகத்திற்குமே மாசு கற்பிப்பதாக அமைகின்றது.

## கட்டுப்படுத்த வேண்டிய ஓர் சில தீய சக்திகள்

இதே நேரம் இவ்வன்முறை அட்டகாசங்களில் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு வீதத்திலும் (1%) குறைவானவர்களே ஈடுபடுகின்றனர். 90%ற்கு மேற்பட்ட மாணவர்கள் தமக்குரிய சமுதாய பொறுப்பை உணர்ந்து ஒழுங்கமைவுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்படுகின்றனர் என்பதை முழுமையாக ஏற்றுக் கொள்ளுகிறோம் ஏனையோர் இவ்வன் முறை அட்டகாசம் புரிவோருக்கு துணை போவதை காணக்கூடியதாயுள்ளது.

இன்று பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற "ராக்கிங்" என்பது மேற்கு ஐரோப்பாவிலேயே தோற்றம் பெற்றது. பிரபுத்துவ முதாயத்தின் கேளிக்கைகளுக்காகவும் பொழுது போக்கிற்காகவும் அவர்களால் உருவாக்கப்பட்டது இது கிராமப்புற மாணவர்களும் நகர்ப்புற மாணவர்களும் அச்சமின்றி ஒன்று கலப்பதற்காக மேற்கொள்ளப்படும் அன்புத்தொல்லை எனும் நியாயப்படுத்தலோடு பல்கலைக் கழகங்களில் தொடர்ந்தது.

மேலைத்தேய ஏகாதிபத்தியத்தின் வழிவந்ததாக அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகம் ஆரமபிககப்பட்ட காலத்திலிருந்தே இது இடப்பெற்று வந்துள்ளது.

## யாழ் பல்கலைக் கழகத்தில் ராக்கிங் என்பது வன்முறை அட்டகாசங்களே

இவ்வாறு இடம்பெற்ற ராக்கிங் தனது அடிப்படை நிலையில் இருந்து மாற்றப்பட்டு இன்று மாணவர் மத்தியிலான வன்முறை அட்டகாசங்களாக நிலைபபடுத்தப்பட்டுள்ளது. இன்று ராக்கிங் என்ற போர்வையில் இடம பெறுவது முற்று முழுதான வன்முறை அட்டகாசங்களே.

பல்கலைக் கழகத்திலுள்ள ஓர் சில தீய சக்திகள் ராக்கிங் என்ற போர்வையில் தம் பாலியல் ரீதியான வக்கிரங்களை தீர்த்துக் கொள்கின்றனர்

கடந்த முறை ராக்கிங் என்ற போர்வையில் இடம் பெற்ற மோசமான சம்பவங்களை நாம் பூரணமாக விசாரணை செய்தோம். இதில் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற வன்முறை அட்டகாசங்களை கொண்டு நடத்திய ஓர் பல்கலைக்கழக மாணவனை கைது செய்ததைத் தொடர்ந்து ராக்கிங் என்ற போர்வையில் நிரூபிக்கப்படாமல் இடம் பெற்று வந்த திடுக்கிடும் செயற்பாடுகளை துல்லியமாக நிரூபித்தோம் இதிலிருந்து ராக்கிங் ஈடுபடும் பெரும்பாலோனோர் பாலியல் ரீதியான தம் இச்சைகளை தீர்த்துக் கொள்வதற்காவே ஈடுபடுவதை அவதானிக்க முடிந்தது.

இச சகிக்க முடியாத மோசமான செயற்பாடுகளால் மாணவ மாணவிகள் உடலியியல் உளவியல் ரீதியாக கடுமையாக பாதிப்புக்குள்ளாக்கப் படுவதை கடந்த காலங்களில் நோக்க முடிந்தது.

## பல்கலைக்கழக நல்ல சக்திகளுடன் இணைந்து - முற்றுக் கட்டுப்படுத்துவோம்

இந்த இழிநிலையை நன்குணர்ந்து இதைத் தடுக்க முழு பல்கலைக்கழகத்தினலும் பல்வேறு முயற்சிகள் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டன

பல்கலைக் கழகத்திலுள்ள அனைவரும் பிரசுரங்களை வெளியிட்டு இதைக் கட்டுப்படுத்து மாறு கோரியுள்ளனர்

இதே நிலையில் மிகத் துல்லியமாக குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டோர் கூட பல்கலைக்கழக நிர்வாகத்தினல் தண்டனை வழங்கப்படும் போது அவற்றை பல்வேறு அடாவடித்தனமான செயற்பாடுகள் மூலப் வெற்றி கொண்டு தப்பித்துக் கொள்ளவது பல்கலைக் கழக வழமைகளில் ஒன்று

மேலும் இந்த வன் முறை அட்டகாசங்களில் ஈடுபடும் இச் சமூக விரோத சிறு கும்பல்; இதற்கெதிரான பெரும் பான்மையான நல்ல சக்திகளை வன்முறைகள் மூலம் பயமுறுத்துதலும் ஏனைய இப்பக்க பின்னணியை தம் அடாவடித்தனத்திற்கு துணையாக பயன் படுத்துதலும் கடந்த காலங்களில் பல்கலைக் கழகம் கண்ட அனுபவங்களாகும்

இத்துடன் ஓர் சாதாரண இளைஞன் இதே மாதிரியினை வன்முறை அட்டகாசததில் ஈடுபடும்போது சிவில் நிர்வாகம் சீர்குலைந்து பொலிஸ் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இன்நிலையில் நடவடிக்கை எடுக்கும் நிலையில் உள்ள நாம் பல்கலைக் கழகம் என்ற போர்வையில் ஓர் இளைஞன் புரியும் சகிக்க முடியாத உடலியியல் உளவியில் ரீதியான சேஷ்டைகளை புறக்கணிப்பதா

மேலும் சமுதாயரீதியில ஒவ்வொர் மக்களின் பாதுகாப்பையும் உத்தரவாதப் படுத்த வேண்டிய நாம் ஓர் இளம் பெண்ணுக்கு ஏற்படும் உடலியில் உளவியிலரீதியான பெருந் தாக்கத்தை தெரிநதும்தெரியாமலிருப்பதா

இராணுவம் பல்கலைக் கழக மாணவரில்கல்விக்கு உயிருக்கு பெரும் இடையூறு இன்னல்களை விளைவிதது வந்ததை அனைவரும் அறிவர் இன்று தினசரி நாம் உயிர்களைக் கொடுத்து இராணுவத்தை பூரணமாக கட்டுப்படுத்தி வருகிறோம் நெருக்கடி மிக்க இச் சூழ்நிலையில் கல்வியில் முழு அக்கறையெடுத்து எம் எதிர் காலத்தை கட்டியெழுப்பும் படியே நாம் கேட்கிறோம்

எனவே இன்றைய இச் சூழ் நிலையில் இது போன்ற வன்முறை அட்டகாசங்களை தடுக்க இச்சிறு குப்பலுக்கு

(தொடர் பக்கம்-7)

# மக்கள் அணி

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓர் அரச நிர்வாக அமைப்பிலிருந்தும் (அடக்கு முறையிலிருந்து) தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டு ஓர் தனியான அரச நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது.

இதனடிப்படையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் முதற்கட்டமாக சறிலங்காவின் அதிகாரப் பிடியிலிருந்து (அடக்குமுறையிலிருந்து) தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்ளவேண்டிய நோக்கில் ஓரளவு பூரணமான வெற்றியைப் பெற்றுவிட்டது

## இன்றைய சமுதாய நிலை

இந்நிலையில் சிவில்நிர்வாகம் முழுதாக சீர்குலைந்துள்ளன. சமுதாய ரீதியாகஒவவோர் மககளிடையேயும்நிலவி வந்த கட்டுக் கோப்பும் ஒழுங்கும் தளர்தத்பட்டுள்ளன.

ஓர் சிவில் நிர்வாக அமைப்பிலுள்ள நாடுகளில் சட்டம் ஒழுங்கு நீதி நிர்வாகத்தின் பாதுகாவலாக பொலிஸ் சேவை அமைகிறது. சமுதாய ரீதியாக ஒழுஙகு கட்டுக் கோப்பு பொலிஸ் சேவையால் பேணப்படுகிறது.

இநநிலையில திடீரென பொலிஸ் சேவை சீர்குலைக்கப்படின் சமுதாய ரீதியான ஒழுககங்கள், சமுதாய விரோத செயற்பாடுகள், இடம்பெற தொடங்குகின்றன.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டததில் பொலிஸ் நிர்வாகம் முற்று முழுதாக சீர்குலைக்கப்பட்டு ஸ்தமபிதமடைந்து விட்டது.

யதார்த்த சூழலில் சமுதாய ரீதியான ஒழுங்கீனங்கள் சமுதாயத்தின் ஒவ்வோர் அங்கத்திலும் நிலவுகிறது. முதலாளித்துவ அரசமைப்பில அடக்கி வைக்கபபட்டிருந்த சமுதாய விரோதிகள் இயல்பாக கிளர்ச்சியடையத் தொடங்குகின்றனர்.

சமூக விரோத செயற்பாடுகள் கூர்மையடைகின்றன.

மேலும் கிராம ரீதியாக எழும் பிரச்சினைகள் ஒழுங்கமைவான நீதி நிர்வாகம் அற்ற நிலையில் சரியான தீர்வை காணமுடியாத நிலையில் உள்ளது.

இவற்ரோடு சமுதாய ஒழுஙகின்மையால் அன்ருட வாழ்க்கை முறையில் பெரும் நெருக்கடி நிலவுகிறது.

உதாரணமாக எம் இனத்தின் உயிர்நாடியான கல்வியை எடுத்துக் கொண்டால் இன்று ஓர் பாரிய வீழ்ச்சி நிலையை உணரக் கூடியதாய் உள்ளது.

இநநிலைக்கு பல்வகைப் பட்ட காரணங்களிருப்பினும் சமுதாய ரீதியான ஒழுங்கீனங்களும் ஒழுஙகயைவான நிர்வாகமின்மையுமே அடிப் காரணமாய அமைகின்றன.

இநத நிலைமை இன்று சமுதாயத்தின் ஒவ்வோர் அங்கததிலும காணமுடிகிறது.

சட்டவிரோத ''சாராய பாரகள்'' சநதிக்கு சந்தி காணப்படுவதும அங்கீகாரம் இன்றி இறைச்சி, உணவு, தேனீர்கடைகள், பேககரிகள நிறுவபபடுவதும் இயக்குவதும பூனறைய சுகாதாரக கேடுகளாகும.

கட்டுபபாடில்லா இநநிலையில் மன்சார ஒழுஙகு விதிகளுக்கு முரணாக மின்னைபபெறுவது பாவபபது முழுததமிழ பிரதேசங்களையுமே இருளில மூழக வைகக கூடிய செய்கையாகும். எனவே இதுபோன்ற மின்சார ஒழுஙகு விதிகளை மீறுயோர் மது அதாவது ''களளக் கரணட்'' பெற்ருேரின் மின்தொடர்பை மின்சார சபை ஊழியர்கள சமுதாய நன்மை கருதி துண்டிக்க முறபடும்போது அவர்களை மிரட்டுவதும் தாக்குவதும கூட நடைபெறறு வருகிறது,

சமூக ஒழுங்குக்காக பணியாற்றுவோர் தாக்கபபடுவது எவ்வகையிலும் அனுமதிக்கப் படமுடியாததே.

## சமுதாய ஒழுங்குக்காக ......
## போராட்ட வெற்றிக்காக. . . . .

எனவே இவைபோன்ற இப் போராட்ட இடைக்கால கட்டத்தில் எழும் குழப்பங்களை சமாளிக்ககூடிய கிராம ரீதியாக சகல மக்களையும் உள்ளடக்கிய அமைப்பின் முக்கியத்துவம இன்றியமையாதது.

மேலும தமிழ்ழ விடுதலைப் போராட்டம் ஒவ்வோர் மக்களின் அன்ருட வாழ்விலும விருமபியோ விருமபாமலோ பெரும மாற்றங்களை ஏற்படுத்தியே வருகிறது போராடட இடைக்கால கட்டத்தில் உயிர் உடமைகள் இழககப்படுவது தவிர்க்கமுடியாததொன்றே. ஏற்படும் உயிர், உடமை இழப்புக்கள் அனைவருக்கும் பொதுவானதே. எனவே இவ் இழப்புகளையும் துன்ப துயரங்களையும் பொதுவாகக் கொண்டு தனி மனித இழப்பாக கருதாமல் சகல மக்களும ஒன்றிணைந்த இவ் இழப்புகளை ஈடுசெய்ய வேண்டும

மேலும் கிராம ரீதியாக பொலிஸ் நிலையங்களோ நீதி மன்றமோ இயஙகாததால்நீதி நிர்வாகமும் எழும் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாமற் போகிறது.

]6 பகக - தொடாசசி]

கெதிராக நட வடிக்கைக எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை எமக்குண்டு

எனவே தான் இத்தகைய மோசமான பண்பற்ற எமது கலாச்சாரத்தை சீரழிப்பதுயான செயற்பாடுகளை பூரணமாக கட்டுப் படுத்துவ தென தீர்மானித்தோம

இதன் சுவரொட்டி மூலமும் அறிக்கை மூலமும் எச்சரிக்கை விடுத்திருந்தோம்

இதையும மீறிஆங்காகிலே ஓர்சில இடங்களில் இடம் பெற்றதாக எமது தெளிவான துரிதமான நடவடிக்கை மூலம் பூரணமாக கட்டுப்படுததப் பட்டது'

ஆனுல் எமது இந்த சரியான நியாயமான நீதியான மாணவரின் பாதுகாப்புக்கான இநநடவடிக்கைக்கு எதிராக செயற் பட்டோர் இடையூருக இருந்தோர் குறித்து நாம் பெரிதும் மனவருத்தம அடைகிரேும்

# மக்களே தம்மை தாமே நிர்வகிக்க...

எனவே கிராமரீதியாக சகலமக்களையும் பிரதிநிதித்துவப்படுததும் ஓர் மக்கள் அமைப்பு இப்பிரச்சினைகளை கையாண்டு இணக்கத்தை ஏறபடுதத வேண்டும். இவ் அமைப்பு முறையில் மேன்முறையீடுகளுக்குரிய அமைப்பு முறையும இன்றியமையாதது.

கிராமரீதியாக தேக்கமடைந்துள்ள அரசின் நிர்வாக அமைப்புகள முடககிவிடப்பட வேண்டும. ஒவ்வோர் பிரிவுகளையும் கையாள கிராமரீதியாக அமைந்துள்ள பொது அமைப்பிலிருந்து அமைப்புகள் உருவாக்கப்படுவது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

இன்று சிறீலங்கா அரசினதாக நிர்வகிக்கப்படும் தபால் தொலை தொடர்பு சேவைகளோ அல்லது நாணய அமைப்பு முறைகள் போன்ற பலவேறு சட்ட அமைப்புகளுக்குரிய பொதுப் பிரசசனைகளை கையாள சகல மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஓா அமைபபின் அவசியம் இன்றயமையாதது.

மேலும் போராட்ட கால கட்டத்தில எமது காலிலேயே தங்கிநற்கும் சுதேச பொருளாதார அமைப்பை கட்டி எழுபப வேண்டும. முக்கிய போராட்ட காலகட்டததில் முக்கிய பிரச்சனையாகிய உணவில் தன்னிறைவு இன்றியமையாதது. உணவு ரீதியான முழு மக்களையும் உளளடக்கிய திட்டமிடல் மூலமே பட்டினிப் பிரச்சினையை எதிர் கொள்ள முடியும்.

மேலுஙம் பொருளாதார திட்டமிடலில் கிராமரீதயான ஒழுங்கமைவுடன்கூடிய திட்டமிடலாலேயே தமிழழூத்தின் சுதேச பொருளாதார அமைப்பை கட்டி எழுபப முடியும்.

தமிழீழ விடுதலைப்போராட்டததில் ஒவ்வோர் மக்களினதும் ஆற்றல்கள் அனைத்தும் போராட்டத்துன் பொருடடே உதாரணமாக வீட்டில் பூமரங்களை நாடடும் அமமா வடடுத்தோட்டத்தில் இறங்க வேண்டும்,

மினி சினிமாவை உருவாக்கும் ஒருவர் சிறு கைததொழில ஒன்றையோ உருவாக்கவேண்டும் இந்தவகையில் மக்கள் அனைவரினதும் பங்களிப்புகள் தமிழீழ விடுதலைப் போரட்டத்தை மையபபடுத்தியதாகவே இருக்க வேண்டும.

(2பக்கம் -தொடர்ச்சி )

மேலும் தொழிற்சாலைகள். அரிசிஆலைகள் ஏனைய தொழில் நிலையங்களால் அவற்றின சுற்ருடலில் வசிக்கும் மக்களுக்கும், அங்கு கடமை புரியும் ஊழியரின் உடல் நிலைக்கும பெரும பாதிப்பு ஏறபடுகின்றது-

இவற்றின் நிர்வாகிகள் சுகாதார அலுவலரின் ஆலோசனையைப் பெற்று இயங்குவது அத்தியாவசியமானது

எனவே இதுபோன்ற பல காரணங்களாலும் ஏனைய பல்வகைப்பட்ட காரணங்களாலும சுகாதார சீர்கேட்டுககுள்ளாகி தொற்று நோய்களும் பரவி வருகிறது. அததுடன் இநநிலைமையை கட்டுப்படுததி எம பிரதேசத்தின் ஆரோககியமான சமுதாயததின உருவாககத்திற்கு சகலமக்களும் பொது நிறுவனங்கள் தொண்டா ஸ்தாபனஙகளும எமமோடு பூரணமாக ஒத்துழைககுமாறு வேண்டிக் கொள்கிரேம்.

(3 பக்கம் தொடர்ச்சி)

ஏற்கனவே ஏற்பட்டிருந்த சம்பவங்களோடு முஸ்லிம் மக்கள் சம்மந்தப்பட்ட இப் பிரச்சனையை நாம சாதாரண நிலைக்குரிய தன்மையில் அணுக முடியாதிருந்தோம்.

எனவே இப் பிரச்சினையை மிகுந்த முன் அவதானத்துடனும் நிதானத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் கையாள வேண்டியிருந்தது.

முழு மக்களையும் திருப்திப்படுத்தும்படி அனைத்து முஸ்லிம மக்களையும் பிரதிநிதித்துவ படுத்தும் அப்பிரதேச சமாதான சபையை இப பிரச்சினையை பூரணமாக விசாரித்து இதற்குரிய தீர்வுகளை வழஙகுமாறு கேட்டிருந்தோம்.

சரியான முடிவுகள் எடுக்க முடியாத சூழ்நிலையில் சமாதான சபை தீர்ப்பு வழங்கும் சகல உரிமையையும அதிகாரத்தையும எமக்கு வழங்குவதாக அறிவித்தனர்.

சரியான கால அவகாசத்தை கொடுப்பதன் மூலம் இப்பிரச்சனையை சுமூகமாக தீர்க்கும் முடிவோடு ஒருமாதம் வரை குற்றவாளிகளை தடுப்புக்காவலில் வைத்திருந்தோம்.

ஆனுல் பாதிக்கப்பட்டவர்களுட்பட்ட முஸ்லிம் மக்களின் மன நிலை குற்றவாளிகளை மன்னிப்பதறகு பதில் அவர்கள் போல் ஆத்திரத்தையும் எதிர்ப்புணர்வையும் படிப்படியாக கூட்டி வந்தது.

சம்பவம் நடந்து ஒரு மாதத்தின் பின்னும் அவர்கள் 8பேருக்கும் மரணதண்டனை வழஙகுமாறு அறிக்கை விட்டனர் ஹர்த்தால நடத்தினர். இறுதியாக ஆக்கிநாஷபபட்ட சூழ்நிலையில் உணர்ச்சி வசபபட்ட நிலையில் மோசமான அடாவடித்தனங்களில இறங்கனர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த நாம் இஸ்லாம் வழமைச் சட்டப்படி கூட பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளை இறுதிவரை மன்னிக்க முடியாத நிலைமையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

குற்றவாளிகள் அனைவருக்கும் மரணதண்டனை வழங்கும்படி பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொண்ட போதும், 4 எம்மக்களைக் கொன்று 13பேரைக காயப்படுத்த காரணமான குண்டை எறிந்தவா, இனவெறி அரசுடன் நெருங்கிய தொடர்பு வைத்து குண்டுகளை பெறறவர் ஆகிய இருவருககும் மரணதண்டனை வழஙகி ஏனையோரை எச்சரித்து தீாப்பு வழங்கிரேும்,

மேலும் பிரச்சனைகளில் அடாவடித்தனங்களில் இறங்கியோரையும் கைது செய்து எச்சரிக்கை செய்து விடுதலையளித்தோம்.

இறுதியாக இன்றைய சூழ்நிலையிலும தமிழ் பேசும் மக்களிடையே குழப்பங்களையும் கலவரஙகளையும தூண்டிவிடும் எம் சக்தியையும் எமமால மன்னிக்க முடியாது.

முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து வரும் இப்போராட்டத்தில் இடம் பெற்ற தமிழ்-முஸ்லிம் சமூகக் கலவரம் ஓர் அழிக்க முடியாத கறையாகவே திகழ்கிறது. கடந்த கால நிகழ்வுகளை படிப்பினையாக எடுத்துக் கொண்டு - எதிரியின் சதிவலையை புரிந்து கொண்டு தமிழ் பேசும் ஒவ்வோர் மக்களும் செயற்படுமாறு கண்டிப்பான உரிமையுடன்- - - - -!

# திரைகடல் ஓடினேம் திரவியம் தேடியல்ல........

எம் தமிழீழப் போராட்டத்திற்கு தேவையான ஆயுதங்களோ அல்லது உபகரணங்களோ, போக்குவரத்தோ, இவை எல்லாமே கடல்மார்க்கமாகவே நடை. நடைபெற்று வருகின்றன என்பது நாம் அறிந்த உண்மை.

எத்தனையோ சொல்ல முடியாத இன்னல்களுக்கு மத்தியில் விசைப்படகைச் செலுத்தி நம் விடுதலைப் போராட்டம் வளர்ச்சி அடைய ஊன்று கோலாக இருந்தவர்களைப் பற்றிச் சில நிமிடம் சிந்திப்போம்,

விசைப் படகைச் சாதுரியமாகச் செலுத்துவதற்கு நன்கு பயிற்சி பெற்றவர்களாலேயே மட்டும் முடியும். இவர்களை நாம் ''ஒட்டிகள்'' என்று அழைப்பது வழக்கம், ஆரம்ப கால கட்டங்களில் இலகுவாகவே எமது விசைப் படகுகள் சென்று வந்தன. கொண்டு வந்தன. ஆனல் எம்முடைய பொருட்கள், ஆயுதத் தளபாடங்கள் கடல்மார்க்கமாகத்தான் கொண்டு வரப்படுகின்றன என்பதை நன்கு அறிந்த சிறிலங்கா அரசு தன் கடல் வலயத்தை அதிகரிக்கத் தொடங்கியது. அந்த அதிகரிப்பானது இப்போது ''டோரா'' எனும் இஸ்ரேல் விசைப்படகு வரை வந்திருக்கின்றது.

நானும் சில தடவைகள் எம்முடைய விசைப்படகிலே சென்று வந்திருக்கிறேன். உண்மையிலேயே அது ஒரு திகில் அனுபவம்தான், 85ம் ஆண்டு முடியும் மட்டும் கடலிலே இடையிலே நேவிக்காரர்களுடைய படகைக் கண்டால் அவர்களை விட வேகமாக ஓடுவது தப்புவது வழக்கமாக இருந்தது. அப்படி எத்தனையோ தடவைகள் எம்முடைய படகுகள் திருப்பி வந்திருக்கின்றன.

அதன் பின் 86 களில் நவீன விசைப்படகுகளில் எம் படகுகளை துரத்தத் தொடங்கியது. அவற்றிடம் இருந்து மீள்வது மிகக் கடினமாகவே இருந்தது. எம்முடைய மூன்று படகுகள் நேவிப்படையினரால் ஆழ்கடலிலே மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. எம்முடைய முதல் படகு மூழ்கடிக்கப்பட்டபின் பலருடைய பலவிசைப் படகுகள் கடலிலே நேவியால் மூள்கடிக்கப்பட்டன.

ஆனல் எம்முடைய ஒட்டிகள் அந்த தியாக தீபங்கள் வீர மறவாகள். கடல் வேங்கைகள, இப்படி சொல்வதால் மட்டும் அவர்களுக்கு மதிப்பளித்துவிட முடியாது என்பது எமக்கு தெரியும்.

அவர்கள், தாம் செல்கின்ற பயணத்தின் ஆபத்தை அறிந்தவர்கள், புரிந்தும் போனவர்கள். போயும் விட்டார்கள், இன்றும் தமிழீழம் காண்பதற்காக பயணம் செய்யத்தான் போகின்ருர்கள்.

இன்று எம் கைகளிலே மின்னிக கொண்டிருக்கின்ற ஒவ்வொரு ஆயுதமும், இன்று எமக்கு வெற்றியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அந்தப் பொருட்களும் அவர்களால் எமக்கு எடுத்துக கொண்டுவரப்பட்டவையே. எனவே எயமுடைய துப்பாக்கிகள் அனைத்தும் சிரம் தாழ்த்தி அவர்களை வணங்குகின்றது.

86ல் எத்தனையோ தடவைகள் ஏன் ஒவ்வொரு தடவையும் என்றுகூடச் சொல்லலாம். நேவிப்படகால் துரத்தப்பட்டு, அவர்களோடு சமர் புரிந்து மீண்டும் வந்தவர்கள் அவர்களுடைய ஒவ்வொரு பட்ணமும் யரணத்தை எதிர் நோக்கியதாகவே இருந்தது நேவி கண்டால் கலைப்பான், கலைத்தால் அடிபாடு, சில வேளை தப்பலாம். அல்லது மூழ்கடிக்கப்படலாம், தரையிலே சண்டை போடுவது போல் அவ்வளவு இலகுவானதல்ல கடல் சண்டை. ஒளிக்க முடியாது, மறைப்புகளுக்கிடையே மறைந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியாது, எம்மைத் துரத்திவரும் பெரிய விசைப்படகு, அதில் இருந்து குண்டுகளைக் கக்கும் பாரிய துப்பாக்கிகள், அலையில் எகிறலா. மேலே தூக்கித்தூக்கி வீசப்படும் எமது படகு, எத்தனை இன்னல்களையும் ஒவ்வொரு தடவையும் சந்தித்தும் கலங்காதவர்கள். உயிரைத் துச்சமென மதித்தவர்கள், இவர்களின் வாழ்க்கை சாவுக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு ஈனப் பிறப்புக்கும் ஓர் எடுத்துக் காட்டு.

நாம் இழந்து எம் விசைப் படகுகளினை சேர்த்து நாம் எம்

கண்ணன்
ரமணன்
லிங்கராஜா
கபில்
தவேந்திரன்
நடேஸ்மாமா
சுதா
திலீபன்
கமல்
பாபு
ரவி
செல்வன்
தம்பி
சசி
நேரு
மேஜர் அருணு
குயிலி
கிருஸ்ணராஜா
சுதர்சன்
கப்ரன் அலெக்ஸ்
லெப்ரினன்ட் கபில்
அர்ச்சுனு
அலிப்
ஜேசு
காந்தன்
ரங்கா
துரைக்குட்டி
ஞானி
தெய்வா
நளினன்
கார்த்திக்
ரவியப்பா
ஆனந்தப்பா
மணிமாரன்
சேரன்
விராகன்
தேவராசா
சியா
பிக்கப் ரவ்
சூரி
2ம் லெப் ரகீம்

அருணுவையும், அருசுச்சுனுவை அலெக்ஸ்சையும் தொலைத்து விட்டோம்,

எப்படி இச்சம்பவம் நடந்தது.

அருணு தன் தாயகம் நோக்கி படகிலே வந்துகொண்டிருக்கின்ருன், கார்த்திக் துரைக்குட்டி, அலீப் மூவரும் ஒட்டியாக செயலாற்றிக் கொண்டிருக்கையில், ரங்கா (''மக்'' GPM) பூட்டப்பட்ட இயந்திரத் துப்பாக்கி மேடையில் தயாராக நிற்க, தெய்வா முன் அணியத்தில்நின்று படகு செல்லும் திசையிலும் பக்கவாட்டாகவும் தூரத்தே வானத்தோடு உறவாடிக் கொண்டிருக்கும் கடலை உற்று பார்த்துக்கொண்டிருக்க படகு அலைகளின் நடுவே மிகவேகமாக நீரைக் கிழித்துக் கொண்டு வந்துகொண்டிருக்கிறது அருணு G3GPmgயும் அலெக்ஸ் M.60 GPmgயும் அருச்சுனு T-92,ரக GPmgயும் வைத்துக் கொண்டு பல எதிர் பார்ப்புகளுடன் வந்துகொண்டிருக்கின்றனர்.படகுஅடிக்கடி அலைகளால் மேலே உயர்த்தப்பட்டு கீழேவந்து விழுகின்றது.

அலெக்ஸ் சொன்ஞன், மச்சான் இன்று கடல் பலமாக அடிக்குது. போட்டை தூக்கி குத்துது. பேசாய் படுக்கைதான் அதற்கு பிறகுதான் எந்த வேலையும்.

படகு நீரை கிழித்துக் கொண்டு சென்று கொண்டிருக்கிறது. படகின் இருபக்கமும் உயர எழுந்துகொண்டிருக்கும் நீரை காற்று திசை திருப்பி படகில் உள்ளவர்களை நோக்கி வீசி அடிக்கின்றது எல்லோம் செப்பமாக நனைந்தபடியே தான் வந்துகொண்டிருக்கின்றனர். உப்புநீர் முகத்தில் வீசப்படுவதால் கண்கள் எரிவெடுக்க எல்லோரும் குனிந்தபடியே இருக்கின்றனர் நேரமோ இருட்டத்தொடங்கி விட்டது.

ரங்கா கார்த்திக்கை கூப்பிட்டு 'டேய். உள்ளே வந்திட்டோம் கூட்டிவை'' என்றுகூற

படகை மிகச் சாதுரியமா செலுத்திக் கொண்டிருக்கும் கார்த்திக் ''டேய் சுற்றிப் பாருங்கடா எங்காவது கறுப்புத் தெரியுதா என்று'' (கறுப்பு என்பது கடலிலே தூரத்தே தெரியும் ஏதாவது பொருள்) மெல்ல இருளத் தொடங்கும் போது எல்லோரும் உப்புநீரால் குளிப்பாட்டுப்பட்டுக் கொண்டிருக்கையல முன்அணியத்தில் நின்ற தெய்வா கத்திஞன். ''வலப்பக்கம் கறுப்புத் தெரியுதடா வடிவாகப் பார்''

எல்லோரும் விழுந்தடித்து வலப்பக்கம் பார்க்க எங்கோ தொலைவில் ஒரு கறுப்புபுள்ளி அது என்ன? எல்லோர் மனதிலும் கேள்விக்குறி படகை வேகப்படுத்திச் செலுத்த புள்ளியும் படகை நோக்கி விரைய புள்ளியை சுற்றி வெள்ளை நுரைப்படலம் தெரிய.

''டேய் நேவியடா' ஏகோபித்த குரல்கள்.4.G.P M.Gகளும் தயாரகின்றன. புள்ளி விரைந்து கொண்டிருக்கிறது பெருதாகிக் கொண்டும் வருகின்றது. படகுகரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது கார்த்திக் சொன்ஞன் ''சோதி அடிக்குது கரை கிட்டே வந்திட்டுது என்று கரையிலே உள்ள வெளிச்சங்களின் ஒளி வானத்திலே பிரகாசிப்பது தூரத்திலே தெரிகின்றது.''

நன்ருக இருட்டவில்லை திடீரென்று படகுள் முன்பாக வலப்பக்கமாக மேலும் ஒரு கறுப்பு தெரிகிறது அது தெளிவாகவே தெரிகிறது நேவிக்காரருடைய விசைப் படகு எம் படகை இடைமறிக்க பாய்ந்து வருகின்றது,

துரைக்குட்டி படகை இடப்பக்கமாக பிடித்துத் திருப்பிஞன். இருநேவிப்படகுகள் எம்படகை துரத்தத் தொடங்கின. எம்படகு இடப்பக்கமாக கரையை நோக்கி ஒடிக்கொண்டிருக்கிறது.

இரு நேவிக்கப்பல்களில் இருந்தும் தானியங்கி துப்பாக்கிகள் முளங்கத் தொடங்குகின்றது. 90கலிபர், 50கலிபர் துப்பாக்கிகள் சரமாரியாக குண்டுகளை தீர்த்த வண்ணம் இருக்க

அப்படகில் இருந்தும் துப்பாக்கிகள் சடசடத்தன.

ஒட்டிகள் யாரும், எம் குண்டுகள் அவர்கள் படகை துளைக்கின்றதா என்பதை பார்க்கவில்லை, அது தேவையும் இல்லை எப்படியாவது கரை சேர வேண்டும். படகு அலைகளால் தூக்கி மேலே, மேலே வீசப்பட வேகம் தடைப்படுகின்றது. ஆனல் பாரிய நேவிப்படகுகள் கடல் அலைகளை வெட்டி கிழித்துக் கொண்டு பாய்ந்து வருகின்றன,

நேவிப்படகில் இருந்து சிவப்பு நிறமாக சீறிக் கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.

''ரேசற் ரவுன்ஸ் அடிக்கிருர்கள். எல்லோரும் கவனம் என்று அலிப் சொல்ல,

''ரேசற் ரவுண்ஸ் என்பது விரைவில் எரியக்கூடிய எண்ணை போன்றவற்றில் பட்டு தீப்பிடிக்க வைக்கக் கூடிய ரவை;

ஒட்டம், ஓட்டம் ஜீவ மரண ஓட்டம்,

ஒவ்வொருவர் மனம் படும் பாட்டை சொல்லத் தேவை இல்லை ரங்காவின் இயந்திர துப்பாக்கி சரமாரியாக ரேசர் ரவுன்சை நேவிப்படகை நோக்கி கக்கிக் கொண்டிருக்க நேவிப்படகில் இருந்து. பாய்ந்து வந்த ரேசர் ரவுண்ஸ் ஒன்று எம் எரிபொருள் தாங்கியைத் துளைக்க எரிபொருள் தாங்கி தீப்பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகின்றது.

பருத்தித்துறையிலே இன் பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப்படுவதை அறிந்து. எம் வீரர்கள் படகு தப்பிவரும் என்று பார்த்துக்கொண்டிருக்க எம்படகு எம் கண் முன்னே வெடித்து தீப்பற்றி எரிவதை கண்டோம்.

ஆனல் செல்லமுடியாது ஏன்! அது தரையில்லை கடல்

**தமது வாழ்வை மட்டும் நினையாமல், தமிழீழத்தை நினைத்தவர்கள் தங்களின் உயிரை நினைக்காமல் விடுதலையை நினைத்தவர்கள் சாவு வரலாம் என்று தெரிந்தும் பயணம் செய்தவர்கள், செய்பவர்கள், பயணம் சென்றவர்கள் பலர் வரவில்லை**

**ஒவ்வொரு முறையும் அவர்கள் தம் பயணத்தைத் தொடரும் போதும், நாம் எப்போதும் கரையிலிருந்து கைவீசி வாழ்த்தி அனுப்புவோம். அது மட்டும்தான் எங்களால் முடியும். பரந்த கடலிலே அவர்கள் கரைந்தபோது எம்மால் அதை உணர முடிந்ததே தவிர உதவமுடியவில்லை. அவர்கள் எரிவதைக் கண்டோம்; எம் கண்களாலேயே பார்த்தோம். பார்த்துக்கொண்டே இருந்தோம், நாம் பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் எரிந்துகொண்டே இருந்தார்கள்.**

